விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 12 திங்கட்கிழமை (26.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 158

## கவனயீர்ப்புப் போராட்டத்தை இன்று நடத்துவதில் சிக்கல்

### 28ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று 26 ஆம் திகதி காலை 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக நடைபெறவிருந்த கவனயீர்ப்பு போராட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று தெரிவித்துள்ளார்.

த.தே.ம.முன்னணியின் யாழ்ப்பாணத்திலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச் சந்திப்பில் அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணனும் கலந்து கொண்டிருந்தார்.

இச் சந்திப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட

20ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு புதுடில்லியில் பலத்த பாதுகாப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் வைபவத்தில் கலந்து கொள்ளும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாகிஸதான் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட கர்சாய் ஆகியோருக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ்வைபவத்தில் பங்கேற்கும் எட்டு நாடுகளின் உயர்மட்ட அரசியல் தலைவர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து புதுடில்லி பொலிஸார் இந்தப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

அதேவேளை, இவ்வைபவத்தைக் குழப்ப தீவிரவாதிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதால், இந்திய படைத்துறையைச் சேர்ந்த 6 ஆயிரம் பேர் பாது

20ஆம் பக்கம் பார்க்க....

## 3 விடுதலைப்புலிகளை மலேசியா நாடுகடத்தும்

(கோலாலம்பூர்)

விடுதலைப்புலிகள் அமைபபை மீள உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று விடுதலைப்புலிகள் அமைப்பின் சந்தேக நபர்களை மலேசியா இலங்கைக்கு நாடுகடத்தவுள்ளதாக அந்த நாட்டின் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

20ஆம் பக்கம் பார்க்க....

# ஜனாதிபதி மகிந்த பங்கேற்பு தமிழக முதல்வர் புறக்கணிப்பு



### இன்று பதவியேற்கிறார் மோடி

(சென்னை) இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் வைபவத்தை புறக்கணிக்க தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா முடிவு செய்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவத்திற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்தமைக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடும் எதிர்ப்பு தெரிவித்து இம் முடிபை எடுத்துள்ளார்.

இவ்வைபவத்தில் பங்கேற்க இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தமைக்கு தி.மு.கவின் தலைவர் கருணாநிதி, ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ மற்றும் உலகத் தமிழர் பேரமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன்

20ஆம் பக்கம் பார்க்க....

## திடீர் காய்ச்சலால் குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

திடீர் காய்சலுக்குள்ளான இளம் குடும்ப பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த கேதாதரன் கிருஸ்ண குமாரி (வயது 25) என்ற 2 வயது ஆண் குழந்தை ஒன்றின் தாயான இளம் குடும்பப் பெண்ணே நேற்று

19ஆம் பக்கம் பார்க்க....

## அரசாங்கத்தின் தடைப்பட்டியல் மீளாய்வு செய்யப்பட வேண்டும்

### இரா.சம்பந்தன் அறிக்கை

(கொழும்பு)

புலம்பெயர் அமைப்புக்களையும் தனியாட்களையும் பட்டியலிடும் தனது முடிபை இலங்கை அரசு மீளாய்வு செய்யவேண்டும் என்றும் 2005 ஆம் ஆண்டின் சட்டத்தில் 'பயங்கரவாதச் செயல்' என வரையறுக்கப்பட்ட விடயத்தில் ஈடுபட்டமைக்கு அல்லது அதற்கு உதவியமைக்கு சாட்சியங்கள் இல்லாத அமைப்புக்களையும் தனியாட்களையும் பட்டியலிலிருந்து நீக்கவேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியிருக்கின்றது.

19ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ்க் கூட்டமைப்பை அந்நியப்படுத்தி விடாதீர்கள்

### மாவை எம்.பி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச நாடுகளிடமிருந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எவ்வாறு அந்நியப்பட்டுள்ளாரோ அதேபோன்று தமிழ்த் தேசிக் கூட்டமைப்பினையும் அந்நியப்படுத்திவிடாதீர்கள் என அக்கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களிடம் உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதேவேளை மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் வாக்காளர் பதிவு நடவடிக்கையில் கூடிய கவனம் செலுத்தி மக்களை

19ஆம் பக்கம் பார்க்க....

## அமெரிக்காவின் புதிய யோசனை

(கொழும்பு)

இலங்கையில் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை தண்டிக்கும் வகையிலான யோசனைத் திட்டமொன்று அமெரிக்க காங்கிரஸ் சபையில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக அடையாளப்படுத்தப் பட்ட நபர்களை அமெரிக்காவிற்குள் அனுமதிக்கக் கூடாது என தீர்மானத்தில் பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையா

19ஆம் பக்கம் பார்க்க....

# ஜனாதிபதி மகிந்தவை அழைத்தமை மோடியின் சிறந்த காய்நகர்த்தல்

### தினமணியில் தெரிவிப்பு

(சென்னை)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பையும் தனது பிரதமர் பதவியேற்பு நிகழ்வுக்கு நரேந்திர மோடி அழைத்துள்ளமை புத்திசாலித்தனமான காய் நகர்த்தல் என்றும், நல்ல இராஜதந்திரம் என்றும் தமிழகத்தில் இருந்து வெளியாகும் தினமணி பத்திரிகை தெரிவித்துள்ளது.

வேண்டாமே விவாதம்! என்ற தலைப்பில் தினமணி பத்திரிகையின் [illegible] தலையங்கத்திலேயே இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது. இது தொடர்பாக இந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இதுவரை தேசிய அரசில் அங்கம் வகிக்காதவர், வெளிவிவகாரக் கொள்கை பற்றிய சரியான புரிதல் இல்லாதவர் என்றெல்லாம் கருதப் பட்ட ஒரு மாநிலத்தின் முன்னாள் முதல்வர் இந்த அளவுக்கு ராஜதந்திரமாகத் தனது பிரதமர் பொறுப்பில் செயல்படுவார் என்பதை யாருமே [illegible]

20ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532

## விற்பனைக்கு

பெரியவிளான் சந்தியில் அமைந்துள்ள யூவானியர் கோயில் அருகாமையில் ஒரு சிறிய கடையுடன் கூடிய இரண்டு பரப்பு காணி பிரதான வீதியில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- குமார் ஸ்ரோர்ஸ்
சுழிபுரம் மத்தி.
0776032332, 0784807169

(6485)

## ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடம் விளைவேலி ஆதன குத்தகைக் குடியிருப்பாளர்களுக்கான அறிவித்தல்

மேற்படி குருபீடக் காணியில் குடியிருக்கும் குடியிருப்பாளர்கள் தங்களின் குத்தகைப் பண நிலுவைகள் முழுவதையும் எதிர்வரும் (08.06.2014) ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் குருபீடத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளவும். ஒப்பந்தம் எழுதாமல் குடியிருப்பவர்கள், நிலுவைப் பணம் செலுத்தாமல் இருப்பவர்கள் ஆகியோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

-குருபீட நிர்வாகம்

(சி-7484)

## விற்பனைக்கு

சுழிபுரம் தபாற்கந்தோர் அருகாமையில் உள்ள பாறாளாய் வீதியில் அமைந்துள்ள இரண்டு கடைகள் கொண்ட கட்டிடம் (மேலே பிளாற்) அதன் பின்புறம் வீடும் கடைக்குரிய சகல தளபாடங்களுடன் (2 பரப்பு) விற்பனைக்கு உண்டு. இவற்றுடன் நெற்பயிர்/ தோட்டம் செய்யக் கூடியவாறு பலிக்கடவை பகுதியில் 10 பரப்பு காணியும் உண்டு.

தொடர்புகளுக்கு: குமார் ஸ்ரோர்ஸ்
சுழிபுரம் மத்தி.
0776032332, 0784807169

(6485)

## மென்பந்து சுற்றுப் போட்டிக்கான பதிவு

கரைச்சி பிரதேச சபையின் அனுமதியுடன் ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் அணிக்கு 11 பேர் கொண்ட மாபெரும் மென்பந்து சுற்றுப் போட்டிக்கு கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் 27/05/2014 மாலை 5 மணிக்கு முன் பதிவினை மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
நிறுசிகா ஸ்ரூடியோ
1ம் பாடசாலை முன்பாக
ஸ்கந்தபுரம்.
தொ.பே.இல:- 0773715763

(சி-7480)

## கோப்பாய் கோமனுக்கு கிடைத்த வெற்றிக்கு எங்கள் மனங்கனிந்த வாழ்த்துக்கள்



**வைத்திய கலாநிதி**

**வை.தியாகராசா (MJF, JP)**

*சேவைக்கு கிடைத்த வெற்றி!*
*சாதனை படைத்த வெற்றி!*

(6488)

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 B1 க்கான உப ஆளுநர் தேர்தலின் அமோக வெற்றியீட்டிய வைத்திய கலாநிதி வை.தியாகராசாவுக்கு அவர்களை வாழ்த்துகின்றோம்.

கி.பாபு
கே.டி.எம். கலர் லாப்
வீடியோ அன் போட்டோ
இராச வீதி,
அச்சுவேலி.

# பிரிகேடியர் தேசப்பிரிய துருக்கித் தூதுவராக நியமனம்

(கொழும்பு)

வெலிவேரியவில் குடிநீருக்காக போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பணித்த படைத்தரப்பின் பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன துருக்கிக்கான இலங்கை தூதரகத்தில் இராணுவ இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்போராட்டத்தின் போது படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, உள்ளூரிலும் சர்வதேச ரீதியிலும் பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து, பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஆனால், அவர் துருக்கிக்கான இலங்கைத் தூதரகத்தில் இராணுவ இணைப்பு அதிகாரியாக தற்போது நியமிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது படைத்தரப்பின் 58-1வது பிரிகேட் தளபதியாக இருந்த பிரிகேடியர் தேசபபிரிய குணவர்த்தன, 58வது படைப்பிரிவுக்கு தலைமை தாங்கிய மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் வலது கையாகவும் செயற்பட்டு வந்துள்ளார்.

அதேவேளை, ஜப்பானுக்கான இலங்கைத் தூதரகத்தில் இரண்டாம் நிலைப் பதவிக்கு ஓய்வு பெற்ற இலங்கைப் படையதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ரோக்கியோவில் உள்ள இலங்கை தூதரகத்தின் உயர் பதவி ஒன்றுக்கு இலங்கை இராணுவ பொலிஸ் தலைமை அதிகாரியாக இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜெகத் குமார விஜேசிறி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவராக ஓய்வுபெற்ற கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட தற்போது பணியாற்றி வருகிறார்.

அதேவேளை, படைத்தரப்பின் தலைமை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா ரஷ்யாவுக்கான இலங்கையின் துணைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளிநாடுகளுக்கான இராஜதந்திரப் பதவிகளுக்கு படையதிகாரிகளை அரசாங்கம் நியமித்து வருகின்றமை தெரிந்ததே. (எ-6)

# தடைதாண்டல் பரீட்சைக்கு சென்றவர் பஸ்ஸிலிருந்து தவறி விழுந்து உயிரிழப்பு

## அநுராதபுரம் பகுதியில் சம்பவம்

(அநுராதபுரம்)

அநுராதபுரத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்தவர் பஸ்ஸிலிருந்து தவறி விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மதியம் அநுராதபுரத்துக்கும் மதவாச்சிக்கும் இடைப்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் சங்கானையைச் சேர்ந்த யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கியில் ஆய்வுகூட உதவியாளராக பணியாற்றும் செல்வநாயகம் ரவீந்திரன் (வயது-50) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

ஆய்வுகூட உதவியாளர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை நேற்று அனுராதபுரம் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது.

இப்பரீட்சையில் தோற்றுவதற்காக அங்கு சென்ற பிரஸ்தாப நபர், பரீட்சை முடிந்து மீளவும் யாழ்ப்பாணம் திரும்புவதற்காக வவுனியா தனியார் பஸ் ஒன்றில் ஏறி மிதிபலகையில் நின்றவாறு பயணித்துள்ளார்.

இதன்போது தவறி நிலத்தில் விழுந்த அவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி நேற்றிரவு 7.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை பிரஸ்தாப நபர் பஸ்ஸிலிருந்து தவறி விழுந்த நிலையில் பஸ்ஸின் சாரதி பஸ்ஸை உடனடியாக நிறுத்தி அவரைக் காப்பாற்ற முன்வரவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் அவ்வீதியூடாக சென்ற ஏனைய வாகனங்களும் காயமடைந்த பிரஸ்தாப நபரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முன்வராத நிலையில் நீண்ட நேரத்துக்குப் பின்னர் அவ்வழியால் வந்த அம்புலன்ஸ் ஒன்றில் ஏற்றியே அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாக தெரிவிக்கப்பட்டது. (எ)

## தாக்கி விட்டு தங்கநகை கொள்ளை

(குருமன்காடு)

வவுனியா, நயினாமடு கிராமத்தில் கடந்த சனிக்கிழமை வீடொன்றிற்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் வீட்டுரிமையாளரை தாக்கிவிட்டு நகைகளை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

நயினாமடுவில் வசித்து வரும் ஓய்வுபெற்ற தபால் ஊழியரான தம்பிராசா செல்வராசா என்பவரின் வீட்டிற்கு சம்பவதினத்தன்று இரவு சென்றவர்கள் அவரின் பெயரைக்கூறி அழைத்துள்ளனர்.

இதனையடுத்து அவர் வெளியில் சென்று பார்த்தபோது அவரை கூரிய ஆயுதத்தினால் தாக்கியதுடன் அவரின் மனைவியின் கழுத்தில் இருந்த இரண்டரைப்பவுண் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த த.செல்வராசா வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-250)

## வாழ்த்துகின்றோம்



### செல்வன் சி.யதுர்ஷன்

வடமராட்சி கணித மூலவள நிலையப் பொறுப்பாசிரியர் திரு.சி.சிவநேசன் அவர்களின் புதல்வன் செல்வன் சி.யதுர்ஷன், சர்வதேச கணித ஒலிம்பியா போட்டிக்கு தெரிவு செய்வதற்காக நடாத்தப்பட்ட பரீட்சையில் தமிழ்மொழி மூல மாணவர்களில் முதலாம் இடத்தையும் தேசிய அளவில் நான்காம் இடத்தையும் பெற்றமைக்காக அவரை பாராட்டுவதுடன் தென்கொரியாவில் நடைபெற இருக்கும் போட்டியிலும் சிறந்த பெறுபேறுகளை பெற வாழ்த்துகிறோம்.

திரு.திருமதி திருமுருகன்
பொலிகண்டி

(சி-7485)

## மரண அறிவித்தல்

### திருமதி யோகேந்திரா சுபத்திராதேவி
### (வேம்படி காரைநகர்)

காரைநகர் சக்கலாவோடையைப் பிறப்பிடமாகவும் வேம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேந்திரா சுபத்திராதேவி நேற்று (25.05.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் சிவக்கொழுந்தின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் கனகம்மாவின் பாசமிகு மருமகளும் யோகேந்திராவின் (ஓய்வுபெற்ற அரசாங்க அச்சக ஊழியர்) அன்பு மனைவியும் யசோதா (ஹொலண்ட்), சுகிர்தா (கனடா), மயூரகுமாரன், ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காண்டீபன் (ஹொலண்ட்), சிவகுமார (கனடா), சந்திரவித்தியா, தர்ஷிகா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சயானா (ஹொலண்ட்), சபினா(ஹொலண்ட்), அஷ்வின் (கனடா), அனுஷன (கனடா), தாரணி,பவித்ரன், பிரஷ்ணவி(கனடா), பிரஷான் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், அமரர்களான லீலாவதி, அரியரட்னம் ஆகியோரின் சகோதரியும், அமரர் விக்னேஸ்வரி மற்றும் டர்சிகா, லலிதாராணி ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.05.2014 செவ்வாய்க்கிழமை பி.ப 2.00மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல், சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்படி, காரைநகர்
யோகேந்திரா (கணவர்) 0212211771
மயூரகுமாரன் (மகன்) 0718015328
காண்டீபன் (மருமகன்) 031243783226
சிவகுமார் (மருமகன்) 0014162089343

தகவல்:
குடும்பத்தினர்

(சி-7486)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் வருகையை அரசியலாக்கிவிடாதீர்கள்

## இராமேஸ்வரம் மீனவர்கள் கோரிக்கை

(இராமேஸ்வரம்)

நரேந்திர மோடியின் பிரதமர் பதவியேற்பு விழாவுக்கு பங்கேற்க இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்தது இந்திய நாட்டின் மரபு. அவரது வருகையால், தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வாய்ப்புள்ளதால், இப்பிரச்சினையை அரசியலாக்க வேண்டாம் என்று தமிழக அரசியல் கட்சியினருக்கு இராமேஸ்வரம் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்கும் விழா டில்லியில் இன்று நடைபெறுகிறது.

இவ் விழாவில் கலந்துகொள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட அயல்நாட்டு தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டதை இராமேஸ்வரம் மீனவர்கள் சார்பில் வரவேற்கிறோம். ஆனால், தமிழக கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு வருகை தருவதன்மூலம் இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வாய்ப்புள்ளது.

பாம்பன் பகுதியில் தேர்தல் பிரசாரத்தின் போது பா.ஜ.க. மூத்த தலைவர் சுஷ்மா சுவராஜ், மத்தியில் பா.ஜ.க. ஆட்சியமைத்தால் தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என வாக்குறுதி அளித்துள்ளார்.

அதனால், பிரதமர் பதவியேற்பு விழாவுக்கு இலங்கை ஜனாதிபதியின் வருகை தமிழக மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந் நேரத்தில் தமிழக கட்சி தலைவர்களும், தொண்டர்களும் எதிர்ப்பு தெரிவிப்பது தமிழக மீனவர்களுக்கு வேதனை அளிக்கிறது.

மேலும், மஹிந்த ராஜபக்ஷ- பிரதமர் மோடி சந்திப்பில் இரு நாட்டு மீனவர்களுக்கும் உள்ள பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என நம்புகிறோம் என்று இராமேஸ்வரம் மீனவர்கள் சங்கத் தலைவர் என்.ஜே. போஸ் தெரிவித்துள்ளார். (2)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

கரைச்சி பிரதேச சபையின் அனுமதியுடன் ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் அணிக்கு 11 பேர் கொண்ட மாபெரும் மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 27ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன் பதிவினை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். தொடர்பு:-0773715763 (கு)


**220ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

**திருமுருகன் கொம் நெற்**

வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

MMBL Money Master



- அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டு, அதற்கான ஆலோசனைகள்
- கனடா, லண்டன், இந்தியாவுக்கான Online Visa விண்ணப்ப சேவை
- அன்பளிப்பு பொருட்கள், உணவுப் பண்டங்களை வீட்டில் இருந்தவாறே அனுப்ப முடியும்
- 3 - 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.

25kg ற்கு மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவுகள்

இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல் சிலோனிற்கு முன்பாக)
தொ.பே.: 021 222 7835

கிளைகள்: இல.18, பிரதான வீதி, தெல்லிப்பழை. பிரதான வீதி சங்கானை. இல.46, ஆடியபாதம் வீதி திருநெல்வேலி. இல.30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி

7 நாட்களும் எமது சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்

(சி-7479)


# இலத்திரனியல் மற்றும் மின்சாதன கழிவு தேசிய முகாமைத்துவ வாரம்

இவ்வருடம் மேமாதம் 27 ஆம் திகதி முதல் ஜுன் மாதம் 2 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் பாவனைக்குதவாத இலத்திரனியல் மற்றும் மின் சாதனங்களின் முகாமைத்துவ வாரமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என வடமாகாண அலுவலக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாவனைக்காலம் முடிவடைந்த பழுதுபார்க்க முடியாத இலத்திரனியல் மற்றும் மின்சாதனங்களான கணனி, கையடக்கத் தொலைபேசி, இறுவெட்டு, CFL, புளோரசன் மின்குமிழ்கள், மின்கலங்கள், அச்சகமைக்கழிவு போன்றவற்றை பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பார உலோகங்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் இரசாயனங்களைக் கொண்ட இயற்கை அழிவுக்குட்படாத மனிதனுக்கும் சுற்றாடலுக்கும் அச்சுறுத்தலாக மாறியுள்ள பொருட்களை ஏனைய திண்மக் கழிவுடன் அகற்றுவது முறையற்றதாகும். எனவே இக்கழிவுகள் தனியாக கையாளப்படல் வேண்டும்.

இதற்காக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் பொருட்டு இக்காலப்பகுதியை மத்திய சுற்றாடல் அதிகாரசபை E-கழிவு வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

இதனையொட்டி வடமாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் E- கழிவுகள் சேகரிக்கப்படும் நிகழ்வுகள் காலை 8.30 மணி முதல் மாலை 3 மணிவரை நடைபெறவுள்ளன.

இதற்கமைய நாளை மறுதினம் புதன்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபை வளாகத்திலும் மறுநாள் 29 ஆம் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச சபை வளாகத்திலும் வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகர சபை மைதானத்திலும் இடம்பெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரசபை பழைய நூலகக் கட்டடத்திலும் எதிர்வரும் ஜுன் மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.மாவட்டத்தில் நல்லூர் கோவில் அருகாமையிலுள்ள றியோ ஐஸ்கிறீம் நிலையம் முன்பாகவும் யாழ்.மாவட்ட அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் E- கழிவுகள் சேகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கண்ணீர் அஞ்சலி

### பொன்னுத்துரை இரத்தினம்

எமது பாடசாலை ஆசிரியையான திருமதி உதயகுமார் சிவகெங்காவின் அன்பு மாமியார் பொன்னுத்துரை இரத்தினம் அவர்கள் 08.05.2014 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்
யா/ மயிலிட்டி வடக்கு
கலைமகள் மகா வித்தியாலயம்

(6471)

# இராசி பலன்

**26.05.2014**

(வைகாசி 12, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 12.34 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 5.20 மணிவரை
இராகுகாலம் 7.22-2.52 மணிவரை
சுபநேரம் 11.52- 01.22 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

**மேடம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், வேலைச் சுமை கூடும், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர்.

**இடபம்:** சிந்தித்து செயற்படவேண்டிய நாள், வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் சில குறைகளும் கேட்க வேண்டி வரலாம், ரோக பயமுண்டு.

**மிதுனம்:** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கடகம்:** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கண்ணியமான ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், பயணத்தால் நன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், வியாபார விருத்தியுண்டு, புதிய திருப்பங்கள் புலப்படும் நாள், தொழில் நலன் கருதிய திட்டங்கள் வெற்றி தரும்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், வேலைச் சுமை கூடும், பிரயாண பயமுண்டு, செலவுகள் அதிகமாகும்.

**துலாம்:** பிற இனத்தவரால் பெருமைகள் சேரும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உடன் பிறப்புக்கள் உங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முற்படுவர், தேக நலனில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**தனுசு:** செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், மாமன் மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்:** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** பொன்னான நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**மீனம்:** குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிலும் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் ஆரம்பிக்கப்படவிருந்த 4 தொழில் முயற்சிகளுக்கு அனுமதி மறுப்பு

யாழ். குடாநாட்டில் புதிதாக நிறுவ பிரேரிக்கப்பட்ட 4 தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்க மத்திய சூழல் அதிகார சபை மறுப்பு தெரிவித்துள்ளது.

குறித்த நான்கு திட்டங்களும் நீர் நிலைகளுடன் தொடர்புடையதாக அமைந்திருந்ததுடன், இந்த திட்டங்களை முன்னெடுப்பதற்கான அனுமதியை யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் மூலம் வழங்கப்பட்டு, சூழல் பாதுகாப்பு தொடர்பான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்ளும் வகையில், குறித்த திட்டங்கள் பற்றிய பிரேரணைகள் மத்திய சூழல் அதிகார சபையின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

ஆனாலும், குறித்த திட்டங்களுக்கு அமைய தொழிற்சாலைகள் யாழ்ப்பாணக் குடா பகுதியில் நிறுவப்படின், குடாநாட்டில் குடிநீர் தட்டுப்பாட்டை மோசமான நிலைக்கு கொண்டு சென்று விடுமென குறிப்பிட்டு, இந்த திட்டங்களை மத்திய சூழல் அதிகார சபை தள்ளுபடி செய்திருந்தது.

இதனை ஏற்றுக்கொள்ளாத முதலீட்டாளர்கள், ஜனாதிபதியினூடாக இந்த திட்டங்களுக்கு மீண்டும் அனுமதியை கோரியிருந்த போதிலும், குறித்த திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டால், யாழ். குடா பகுதியில் குடிநீர் பிரச்சினை பாரிய சிக்கல் நிலையை தோற்றுவிக்கும் என்பதை காரணம் காட்டி, மீண்டும் தள்ளுபடி செய்துள்ளது.

பழரச உற்பத்தி தொழிற்சாலை, மென்பான உற்பத்தி தொழிற்சாலை, மினரல் வோட்டர் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட நீர் திட்டங்கள் இவ்வாறு நிறுவ மத்திய சூழல் அதிகார சபையின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

## வெளிநாட்டு முதலீடு; இலங்கை தவறுகிறது

யுத்தம் நிறைவடைந்த பின்னர், இலங்கையில் நிலையான பொருளாதார அபிவிருத்தி இன்மையால், வெளிநாட்டு முதலீடுகளை பெருமளவில் கவர இலங்கை தவறி வருவதாக சிரேஷ்ட பொருளாதார வல்லுநரான பேராசிரியர் சிறிமால் அபேரத்ன தெரிவித்திருந்தார்.

அரசாங்கம் போதியளவு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், நாட்டின் பொருளாதார நிலை நிலையான வளர்ச்சியை பதிவு செய்யாத காரணத்தால் போதியளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகளை நாடு பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது என மேலும் குறிப்பிட்டார்.

# SLIIT முகாமை மாநாடு

SLIIT கல்வியகத்தின் வணிகப் பிரிவு மாண வர்களின் ஏற்பாட்டில் அண்மையில் SLIIT மாலபே கம்பஸ் அரங்கத்தில் வணிக முகாமைத்துவம் மற்றும் தகவல் முறைமைகள் மாணவர் மாநாடு இடம் பெற்றது.

தொடர்ந்து 8ஆவது ஆண்டாக முன்னெடுக்கப்பட்ட இந்த மாநாடு, "Striving for innovation and beyond" எனும் தொனிப் பொருளின் கீழ் வணிக மற்றும் தகவல் முறைமை துறையின் சமகால பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. இந்த மாநாட்டின் குறிக்கோள், SLIIT இளமாணி பட்டதாரிகளுக்கு சந்தை மற்றும் துறை சார்ந்த அறிவை மேம்படுத்திக்கொள்ள உதவுவதுடன், பட்டதாரி கற்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் அவர்கள் வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ள வழிவகுத்தலாகும்.

மேலும் SLIIT இளமாணிப்பட்டதாரிகளின் திறமையை வெளிப்படுத்தி அதன் தரம் தொடர்பில் தொழிற்துறையை விழிப்பூட்டுவதே இம் மாநாட்டின் நோக்கமாகும்.

இந்த செயலமர்வில் IT - தகவல் முறைமை தீர்வுகள் மூலம் எவ்வாறு நிறுவன பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்பது குறித்தும், இந்த தீர்வுகளை பயன்படுத்தி வளர்ச்சியை சாத்தியப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இதன் போது 5 பல்கலைக் கழகங்கள் பங்குபற்றிய உள்ளக பல்கலைக்கழக புதிர் போட்டி நடைபெற்றது.

இதில் கொழும்பு பல்கலைக் கழகம் முதலிடத்தையும், ICBT இரண்டாமிடத் தையும், ACBT மூன்றாம் இடத்தையும் வென்றன.

# AMWஇன் சிறந்த 30 ரிடிரெடிங் விநியோகஸ்தர் மாநாடு




இலங்கையின் கூட்டாண்மைத் துறையில் முன்னோடியாக திகழும் அசோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் நிறுவனத்தின் ரிடிரெடிங் டயர் பிரிவின் வருடாந்தம் சிறந்த 30 விநியோகத்தர்களை கௌரவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படும் ஒன்றுகூடல் மாநாடு அண்மையில் மவுன்ட் லேவ்னியா ஹோட்டலில் இரு தினங்களாக நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பிரதான நோக்கம், ரிடிரெடிங் துறையைச் சேர்ந்த சிறந்த 30 விநியோகத்தர்களை கௌரவிக்கும் வகையில் அமைந்திருந்தது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக AMW குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளரான சமந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

இவருடன் நிறுவனத்தின் பணிப்பாளர்களும் பங்குபற்றியிருந்தனர். சுமார் 1000க்கும் மேற்பட்ட விநியோகத்தர்களிலிருந்து 30 விநியோகத்தர்கள் வரை தமது குடும்ப அங்கத்தவர்கள் சகிதம் இந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை பெற்றிருந்தனர்.


இவ்வாண்டு நிகழ்வின் தொனிப்பொருளாக (அபி எக்கட) நாம் ஒன்றாக (We are One) என்பது அமைந்திருந்தது.

2013 ஆண்டுக்கான சிறந்த டயர் விநியோகத்தர்களுக்கு பெறுமதி வாய்ந்த அன்பளிப்புகள், பணப்பரிசுகள் மற்றும் வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள் போன்றன வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

AMW விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் நிமல் எஸ்.ரத்நாயக்க வெற்றியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில், 2013 ஆம் ஆண்டு என்பது நிறுவனத்துக்கு பல்வேறு காரணங்களுக்காக விசேடத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது என குறிப்பிட்டார்.

## அம்பாஸ்டர் விடை பெறுகிறது

இந்திய அரசியல்வாதிகளின் விருப்ப வாகனமாக பார்க்கப்பட்ட அம்பாஸ்ஸடர் காரின் உற்பத்தியை இந்தியாவின் மிகப் பழைய கார் உற்பத்தி நிறுவனமான ஹிந் துஸ்தான் மோட்டார்ஸ் நிறுத்தி வைத்துள்ளது.




கடன்கள் பெருகிவருவதாலும், வாங்க ஆட்கள் இல்லை என்பதாலும், உற்பத்தித்திறன் குறைந்துவிட்டபடியாலும், கொல்கத்தா அருகிலுள்ள தொழிற்சாலையில் இருந்து உருவாக்கப்படும் இந்த காரின் உற்பத்தியை காலவரையின்றி இடைநிறுத்துவதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

1950களின் பிற்பகுதியில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட இந்தக் காரின் வளைவுகள் கொண்ட பிரபல வடிவம், நெடிய உற்பத்திக் காலம் முழுக்கவுமே பெரிதாக மாறியிருக்கவில்லை.

இந்த கார் உற்பத்தித் தொழிற்சாலையில் பணியாற்றிவந்த ஊழியர்கள் சுமார் இரண்டாயிரத்து ஐநூறு பேரும் மொத்தமாக ஊதியமற்ற விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளனர்.

## சகாரா ஹோட்டல்களை விற்று பிணையில் வர முடிவு




(புதுடில்லி)

சகாரா குழும அதிபர் சுப்ரதா ராய், வெளிநாடுகளில் உள்ள ஓட்டல்களை விற்பனை செய்து, 21 ஆயிரம் கோடி ரூபாய் ஜாமினில் வெளி வர முடிவு செய்துள்ளார்.

சகாரா குழுமத்தை சேர்ந்த இரண்டு நிறுவனங்கள், முறைகேடாக வசூலித்த, 44 ஆயிரம் கோடி ரூபாயை, முதலீட்டாளர்களுக்கு திரும்ப அளிக்காமல் உள்ளன.

இது தொடர்பாக, "செபி" தொடர்ந்த வழக்கில், சுப்ரதா ராய், கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட்டு, திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவர், 21 ஆயிரம் கோடி ரூபாய வைப்புச் செய்து, பிணை பெறலாம் என, உச்ச நீதிமன்றம் நிபந்தனை விதித்துள்ளது. இந் நிலையில், நியூயார்க் மற்றும் லண்டனில் உள்ள ஓட்டல்களை விற்று, 21 ஆயிரம் கோடி ரூபாய் திரட்ட உள்ளதாக, உச்ச நீதிமன் றத்தில் சகாரா குழும வழக்கறிஞர் தெரிவித்தார்.

இதையடுத்து, சுப்ரதாவை, வீட்டுக் காவலுக்குமாற்றுமாறும், அவர் கோரிக்கை விடுத்தார். ஆனால் அவரது கோரிக்கையை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

## அம்பானிகளின் புதிய வர்த்தகம்

ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்தின் தலைவர் அனில் அம்பானி, சிங்கப்பூரைச் சேர்ந்த மதுபான முதலீட்டாளரான ரவி விஸ்வநாதனுடன் இணைந்து சூலா வைன்ஸ் நிறுவனத்தின் 30 சதவிகிதப் பங்குகளை சுமார் 420 கோடி ரூபாய்க்கு வாங்கத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளிவந்துள்ளது.

அனில் அம்பானியின் சகோதரர் முகேஷ் அம்பானி, KFC வறுத்த சிக்கின் வியாபாரத்தைத் தொடங்கத் திட்டமிட்டிருப்பதாக சில மாதங்களுக்கு முன் செய்தி வெளியானது.

தி எகனாமிக் டைம்ஸ் நாளிதழ், வெளியிட்டுள்ள செய்தியில், இந்தியாவின் பெரும் மதுபானத் தயாரிப்பாளரான சூலா வைன்ஸ் நிறுவனத்தின் தலைமை நிறுவனமாகிய நாசிக் வின்ட்னர்ஸ் நிறுவனத்தின் முதலீட்டாளரான எவர்ஸ்டோன் ப்ரைவேட் ஈக்விடியின் 30 சதவிகிதப் பங்குகளை வாங்க அனில் அம்பானியும் விஸ்வநாதனும் அணி சேர்ந்திருப்பதாகத் தெரிவித்துள்ளது.






# பங்குச்சந்தைச் சுட்டிகள் சரிவு

11 மாதங்களில் பதிவாகிய உயர்ந்த பெறுமதிகளை பதிவு செய்திருந்த கொழும்பு பங்குச் சந்தை கடந்த வாரம் நடவடிக்கைகள் நிறைவடைகையில் மறை பெறுமதியில் நிறைவடைந்திருந்தது.

இலாபமீட்டும் நோக்கில் பெருமளவான பங்குதாரர்கள் பங்குகளை கைமாற்றியிருந்ததன் காரணமாக, இந்த சரிவு சந்தையில் பதிவாகியிருந்தது. புரள்வு பெறுமதி ஆரோக்கியமானதாக பதிவாகிய போதிலும், சந்தையின் பிரதான சுட்டிகள் மறை பெறுமதியில் நிறைவடைந்திருந்தன.

வெள்ளிக்கிழமை நடவடிக்கைகள் நிறைவடைந்த போது அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 6,280.31 ஆகவும், S&P சிறிலங்கா 20 சுட்டி 3459.43 ஆகவும் பதிவாகியிருந்தன.

மே 19ஆம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ. 3,346,005,196 அமைந்திருந்தது.

கடந்த வாரம் மொத்தமாக 25,481 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 23,992 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 1,489 ஆகவும் பதிவாகியிருந்தன.

கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் குருவிட்ட ரெக்ஸ்ரைல், பிடிஎல், ஹெல்சி, சிங்கபுத்திர பினான்ஸ், செரன்டிப் லான்ட் போன்றன முதல் ஐந்து சிறந்த இலாபமீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

சிலோன் லெதர் (உரிமை), பிசிஎச் ஹோல்டிங், சிரஸ் லிசர், எஸ்எம்பி லீசிங், சிஜஎப்எல் போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நஷ்டமீட்டியதாக பதிவாகியிருந்தன.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்


(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.90 | 131.78 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 216.67 | 222.87 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 174.93 | 180.66 |
| சுவிஸ் பிராங் | 143.05 | 148.31 |
| கனேடிய டொலர் | 117.66 | 121.66 |
| அவுஸ்திரேலிய டொலர் | 118.16 | 122.63 |
| சிங்கப்பூர் டொலர் | 102.42 | 105.78 |
| ஜப்பான் யென் | 1.26 | 1.30 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.23 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.48 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷவை அழைக்காதே; மே 17 இயக்கம் ஆர்ப்பாட்டம்




(சென்னை)

இந்திய மோடி அரசே "தமிழினப் படுகொலையாளன் ராஜபக்ஷவை அழைக்காதே, இந்தியாவுக்குள் அனுமதிக்காதே" எனக் கோரி மே பதினேழு இயக்கம் சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டம் சென்னை வள்ளுவர் கோட்டத்திற்கு அருகில் நேற்று நடைபெற்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்த ராஜபக்ஷவை இந்திய ஒன்றியத்திற்குள் வரவழைத்திருப்பது இந்திய ஒன்றியத்தில் வாழும் தமிழர்களை அவமானப்படுத்தும் செயலாகவே இருக்கும் என மே பதினேழு இயக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசும் இலங்கை ஜனாதிபதி இனப்படுகொலையாளிகள் என 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஜேர்மனியில் கூடிய நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் தீர்ப்பளித்தது.

இவ்வாறான சூழ்நிலையில், மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட வேண்டும் என்று உலகமெங்கும் வாழும் தமிழர்களும், மனித வுரிமை செயற்பாட்டாளர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

இப்படியான நிலைமையில், இனப்படுகொலைக் குற்றவாளியை சிறப்பு விருந்தினராக இந்தியாவை ஆளப் போகும் பா.ஜ.க. அழைத்திருப்பது இனப்படுகொலை குற்றவாளிகளை உலக அரங்கில் காப்பாற்றும் செயலாக அமையும்.

இதற்காக தான் ராஜபக்ஷவை பா.ஜ.க. விரும்பி அழைக்கின்றதா என்ற சந்தேகம் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் மே பதினேழு இயக்கம் தெரிவித்துள்ளது.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் கருத்து வெளியிட்ட மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் உரையாற்றுகையில்,

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு இனப்படுகொலை அரசு எனவும் இலங்கையுடன் இந்தியா எந்த நட்புறவும் வைக்கக் கூடாது என்று தமிழ் மாநில அரசு தமிழக மக்கள் சார்பில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இதனை மதிக்காமல் நாட்டை ஆளப் போகும் பா.ஜ.க. செயற்படுவது இந்திய கூட்டாச்சி தத்துவத்திற்கு எதிரானது என திருமுருகன் காந்தி குற்றம்சுமத்தினார். (2)

## வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

மொரட்டுவ, கொரலவெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் வண்டி ஒன்றும் லொறி ஒன்றும் மோதுண்டதில் இவ் விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது 20 வயது இளைஞனும் 16 வயதுச் சிறுமியும் உயிரிழந்துள்ளனர். இதேவேளை பிறிதொரு மோட்டார் வண்டி ஒன்று குறித்த லொறியுடன் மோதுண்டதில், மோட்டார் வண்டியில் பயணித்த நபர் காயமடைந்துள்ளார்.

இந்நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (2)


## University of Jaffna

**Professor S.Krishnarajah Memorial Lecture**

**Understanding Hermeneutics and Postmodernism from Indian Perspective**

*Speaker* Dr.S.Panneerselvam
University of Madras.

*Venue* Kailasapathy Auditorium
University of Jaffna

*Date* 27.05.2014

*Time* 2.30 pm

All are cordially invited

Registrar

(7474)



## றியல் எஸ்ரேற்

முகவர்களை இணைக்கும் விசேட திட்டம்

வடமாகாணத்தில் தனியொரு நிறுவனமாக...

உங்களுக்குத் தேவையான காணி, வீடுகளை வாங்கித்தரவும் உங்கள் காணி, வீடுகளை விற்றுத்தரவும் அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனம்

காணி, வீடுகளை விற்றும் வாங்கியும் கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்நிறுவனத்துடன் தங்களை இணைத்துக்கொண்டு, தங்கள் பணியைச் சுலபமாக்கிக் கொள்ளலாம்.

றியல் எஸ்ரேற்றில் உங்களை இணைத்து விற்பனையை விரைவாக்க

உங்கள் முழு விபரம் அடங்கிய விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்)கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பியுங்கள்.

விளம்பர இல:- 1000

மே.பா: வலம்புரி

இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண்வீதி,

யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு

அனுப்பி வைக்கவும்.

(சி-6356)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 77 செவ் 8 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L / வியாபாரம்<br>தொ.இ: B/1387 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 45 செவ் 2 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: HNDA / முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/1989 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 10.5<br>தகைமை/தொழில்: A/L / வியாபாரம்<br>தொ.இ: B/1389 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 7.25 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/1990 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 16<br>தகைமை/தொழில்: A/L, கட்டடத்துறை / சுப்பர் மார்க்கெட் வேலை (UK – Student Visa)<br>தொ.இ: B/1390 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 40 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 155 cm<br>தகைமை/தொழில்: A/L, IT, IAB, AAT<br>தொ.இ: G/2003 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 71 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: BSc, MSc / Computer Engineer (UK – Student Visa)<br>எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்<br>தொ.இ: B/1392 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 31.25 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc / கணக்காளர் (USA – Citizen)<br>எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்தானவர்<br>தொ.இ: G/2004 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005


E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியின் பதவியேற்பை தே.மு.தி.க. புறக்கணிக்கும்

## விஜயகாந்த் அறிக்கை



**நரேந்திரமோடி பாரதப் பிரதமராக பதவியேற்கவுள்ள நிகழ்வுக்கு இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டமையை ஏற்க முடியாது என தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.**

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பாரத நாடு பல மாநிலங்களை உள்ளடக்கி வேற்றுமையில் ஒற்றுமை கண்டு வருகிறது. பாரதப் பிரதமராக நரேந்திரமோடி பதவியேற்கும் விழாவில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ள அழைப்பு விடுத்து இருப்பதைதேமுதிக. ஏற்றுக்கொள்ளவில்லை. இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

இலங்கையில் நம் தமிழின மக்களை இனப்படுகொலை செய்து, கொன்று குவித்த மாபாதக செயலை எந்த காலத்திலும் மன்னிக்கவும் முடியாது, மறக்கவும் முடியாது. இன்றுவரை தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதும், படுகொலை செய்யப்படுவதும் வாடிக்கையாகி வருகிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்பட வேண்டும் என்ற அடிப்படையில் 2009ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்று தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சியினருக்கும் கோரிக்கை விடுத்தேன். அதற்கு யாரும் அப்பொழுது செவி சாய்க்கவில்லை.

இதே காரணத்திற்காக ஜனாதிபதி தேர்தலையும் தே.மு.தி.க. புறக்கணித்தது. பிரதமராக இருந்த மன் மோகன் சிங் சென்னை வந்த போது என்து தலைமையில் கறுப்புக் கொடி காட்ட முயற்சித்து, நானும், என்னு டன் பல்லாயிரக்கணக்கான தொண்டர்களும் கைது செய்யப்பட டோம். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தே.மு.தி.க. பல ஆண்டு காலமாக பல போராட்டங்களை நடத்தியுள்ளது.

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சிககு ஆறு மாதங்கள் அவகாசம் கொடுததிருந்து, அதன் பின்புதான் மக்கள் பிரச்சினைகளை சுட்டிக்காட்டினோம். அதேபோல் புதியதாக பொறுப் பேற்கும் நரேந்திரமோடி ஆட்சிககும் ஆறு மாத காலம் அவகாசம் தரப்பட வேண்டும். அதன் பின்புதான் எந்த விமர்சனமாக இருநதாலும் வைக்கப்பட வேண்டும்.

நரேந்திரமோடியின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ள இலங்கை ஜனாதிபதியை மட்டும் அழைக்கவில்லை. சார்க் நாடுகள் அமைப்பில் உள்ள 8 நாட்டுத் தலைவர்களையும் இந்த விழாவில் பங்கேற்க அழைப்பு விடுத்துள்ளது. ஒட்டு மொத்த இந்தியாவின் எதிர்ப்பு நாடான பாகிஸ்தான் உட்பட 8 நாடுகளும் இவ விழாவில் பங்கேற்பதாக உறுதி அளித்துள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ மட்டும் இந்த விழாவிற்கு பங்கேற்க அழைத்திருந்தால் நிச்சயமாக தே.மு.தி.க. இவ்விழாவில் பங்கேற்காது.

நரேந்திரமோடியின் ஆட்சி இந்தயாவில் அமைய வேண்டும் என்று தமிழகம் முழுவதும் தேர்தல் பிரசாரம் செய்துள்ளேன். அவரை நேரில் சந்தித்தபோது, இலங்கைத் தமிழர் பிரச்சினை, தமிழகத்தில் மீனவர பிரச்சினை உள்ளிட்ட அனைத்து தமிழக பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதாக என்னிடம் உறுதி அளித்துள்ளார். இதை மீண்டும் அவரிடம் தேமுதிக சார்பில நான் வலியுறுத்துவேன் என அவ்வறிக்கையல் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2)

# சட்டத்தை நிலைநாட்ட ஆலோசனை சபை

(கொழும்பு)

சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்ட ஆலோசனை சபை ஒன்றை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஒழுக்கம் நிறைந்த மற்றும் சட்டத்தை கடைப்பிடிக்கும் சமூகம் ஒன்றை உருவாக்குவதற்காக கொள்கை மற்றும் திட்டங்களை வகுக்க தேவையான அனுபவங்களை கொண்டவர்கள் இந்த சபைக்கு நியமிக்கப்படவுள்ளனர்.


சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான அமைச்சரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைத்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 130 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 140 | 140 |
| தக்காளி | 160 | 160 | 130 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 30 | 40 |
| கோவா | 100 | 100 | 70 | 100 |
| கரட் | 120 | 100 | 90 | 120 |
| பூசணி | 70 | 60 | 50 | 60 |
| புடோல் | 70 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 130 | 120-160 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 | 90 |
| பாகற்காய் | 160 | 120 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 40 | 60 | 60 |
| பயற்றங்காய் | 80 | 100 | 60 | 60 |
| லீக்ஸ் | 80 | 80 | 90 | 100 |
| பீற்றூட் | — | 50 | 80 | 100 |
| கறிமிளகாய் | 90 | 80 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 60-80 | 100 | 140 | 60 |
| போஞ்சி | — | 180 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 100 | — | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 90-120 | 120 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 80 | 100 | 90 | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 25

### யோகிஸ் தனீஸ்





### அகஸ்ரின் ஸ்ரின்




### சிவா கார்த்தி




### குலசேகரம் ஜனார்த்தனன்




### சிறிதரன் சிறி



### மகேந்திரன் திவா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேளாங்கன்னி ஆலய திருவிழா


மிருசுவில் பழைய வாய்க்காலில் அமைந்துள்ள தூய வேளாங்கன்னி ஆலய திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 5




மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என மிருசுவில் புனித நிக்கலஸ் தேவாலய பங்குத்தந்தை அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நவநாள் வழிபாடும் மறுநாள் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடும் 31 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இவ் ஆலயத்தின் 25 ஆவது ஆண்டு யூபிலி திருவிழா திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

அன்றையதினம் அன்னையின் திருச்செபமாலைப் பேரணியும் இடம்பெறும். (அ)



நன்றி:-மிரர்

# பிரதேசசபைகளின் செயற்பாடுகள் மனவேதனையை தருகின்றன

## வெதும்பினார் மாவை

(யாழ்ப்பாணம்)

ஜனநாயகத்தின் பேரால் வெற்றி பெற்ற இந்த அரசு இராணுவத்தின் பலத்துடன் சர்வாதிகாரப் போக்குடனேயே செயற்பட்டு வருகின்றது என்று குற்றம் சாட்டியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் மிகவும் மனவேதனையை ஏற்படுத்தியுள்ளதாகவும் கவலையுடன் தெரிவித்தார்.

அதேவேளை ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட எந்த உறுப்பினர்களும் பாதுகாக்கப்படமாட்டார்கள் அடுத்த முறை தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஒருங் கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று வலிகாமம் தெற்கு பிரதேசசபை (சுன்னாகம்) பிரதான மண்டபத்தில் அச்சபையின் தவிசாளர் தி.பிரகாஷ் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தமிழினம் கடந்த 60 வருடங் களுக்கு மேலாக பல அடக்குமுறைகளுக்குள்ளும் அழிப்புகளுக்கு மத்தியிலும் வாழ்ந்து வருகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு போர் அழிவுக்குள் சிக்கிய எமது இனம் எமது தமிழ்ச்சமூகம் எழுச்சி கொண்டு வடக்கு மாகாணசபைத் தேர்தலில் பெருவாரியாக வாக்களித்து எமது இனத்தின் எதிர்காலத்தை வலியுறுத்தியிருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தோற்கடிக்கப்பட்ட சமுதாயமாக தமிழ் மக்களை இந்த அரசு பார்க்கின்றது.

ஆனால் ஜனாதிபதித்தேர்தலின் போதும் அதற்குப் பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போதும் வடக்கு வாழ் மக்கள் ஜனாதிபதியையும் அவரின் கீழ் இயங்கும் இந்த அரசையும் தொடர்ச்சியாக தோற்கடித்தே வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் இழைத்த தவறால் தமிழ் பேசும் தரப்பு முழுமையாக ஆட்சியமைக்கமுடியவில்லை.

வடக்கு கிழக்கில் மக்கள் தொகையும் குடிசனப்பரம்பலும் பல மடங்கு குறைக்கப்பட்டுள்ளபோதும் முன்பு இல்லாத வாக்களிப்பு வீதம் இம்முறை வடக்கு மாகாண சபை தேர்தலில் காணப்பட்டது.

இந்த அரசு தமிழினத்தை கூண்டோடு அழிக்க எடுத்த முயற்சிகள் தகர்த்தெறியப்பட்டு எமது மண்ணில் நாம் வாழவும் ஆளவும் திடசங்கற்பம் பூண்டுள்ளோம் என்பதை வாக்களிப்பு மூலம் மக்கள் மீண்டும் நிரூபித்துள்ளனர்.

கடந்த 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மக்கள் எழுச்சியை தமது வாக்களிப்பு மூலம் காட்டியுள்ளனர்.

இவ்வாறு மக்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கு அளித்து வரும் மிகப்பெரும் ஆதரவை சிதைக்கும் வகையில் எமது கட்சியின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் உள்ளன.

எமது கட்சிக்கு மக்கள் அளித்து வரும் ஆதரவுக்கு ஊனம் விளைவிக்க முற்படக்கூடாது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எம்மை வெற்றி பெறச் செய்த மக்களும் மகிழ்ச்சியாயில்லை நாமும் மகிழ்ச்சியாக இல்லை.

அவ்வாறான நிலையில் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் உள்ளன.

மேலும் ஊழல் மோசடிகளில் ஒரு சில பிரதேச சபைகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அவ்வாறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை நாம் ஒரு போதும் பாதுகாக்கமாட்டோம். அத்தோடு குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவர் அடுத்த தேர்தலில் எமது கட்சி சார்பாக போட்டியிட அனுமதிக்கப்படமாட்டார்.

எமது பதவிகளுக்காகவும் தேர்தல் வெற்றிக்காகவும் உங்களைப் பாதுகாத்துக் கொள்வோம் என்று நீங்கள் நினைப்பீர்களேயானால் அது மிகவும் தவறு.

நான் மூன்று தலைமைக்கு கீழ் இருந்தவன். தந்தை செல்வா, அமிர்தலிங்கம், பிரபாகரன் ஆகியோருக்கு கீழ் பணி புரிந்ததோடு எனது தனிப்பட்ட தலைமைக்கு கீழும் செயற்பட்டு வருகின்றேன்.

எனவே எனது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படாது. அதேவேளை உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான தொடர்ச்சியான விமர்சனங்களுக்கும் இடமளிக்கமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், ச.சுகிர்தன், திருமதி அனந்தி சசிதரன், அ.பரஞ்சோதி உள்ளிட்ட மாகாணசபை உறுப்பினர்கள் பிரதேச சபைகள் மற்றும் நகரசபைகளின் தவிசாளர்கள் உறுப்பினர்கள் எனப்பலர் பங்கு கொண்டிருந்தனர். (2-6)

# திறன் மேம்பாட்டுப் பயிற்சி நெறிகளுக்கு வளவாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கலாசார மத்திய நிலையத்தினால் நடத்தப்படவுள்ள திறன் மேம்பாட்டுப் பயிற்சி நெறிகளுக்கு வளவாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரப்படுவதாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய நடத்தப்படவுள்ள பயிற்சி நெறிகளாக சங்கீதம்- (கிராமியம், சாஸ்திரீயம்) நடனம்- (கிராமியம், புதிய ஆக்கம், பரதம், கதகளி) ஓவியம்- (சிற்பம்- செதுக்கற்கலை) ஆக்கத்திறன்- (நாடகமும் மற்றும் அரங்கக் கலைகளும்) பாரம்பரியக் கைப்பணிக் கலைகள்- பிரதேசத்திற்கு உரித்தான உற்பத்திப் பொருட்களால் மேற்கொள்ளப்படும் கைப்பணி பாட நெறிகள் (மண், பிரம்பு, சிரட்டை, பனை ஓலை) போன்றன.

சோதிடம் மற்றும் உள்நாட்டு மருத்துவம், உடல் உள நல அபிவிருத்திக் கலை-( அரங்கக்கலை, யோகாசனம்) மொழிப் பாடநெறிகள்- (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) முன்பள்ளி மாணவர்களுக்கான திறன் அபிவிருத்தி, கணனிப் பயிற்சி, தகவல் தொடர்பாடல், அழகியல்-( தையல் பின்னல்- சமையல்- மணமகள் அலங்கரிப்பு) ஆகியவையாகும்.

விண்ணப்பதாரிகள் அனைவரும் பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவினுள் வசிப்பவர்களாக இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது முழுப் பெயர், பிறந்த திகதி, வயது, முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், கல்வித் தகைமை, துறைசார்ந்த தகைமை போன்ற சுயவிபரங்கள் அடங்கிய தமது விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக "பிரதேச செயலர், பிரதேச செயலகம், பருத்தித்துறை" என்ற முகவரிக்கு அனுப்புமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# மோட்டார் சைக்கிள் திருட்டு

(கரணவாய்)

நெல்லியடி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது என கடந்த வெள்ளிக்கிழமை வீட்டு உரிமையாளரினால் நெல்லி யடி பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திருட்டுச்சம்பவம் நெல்லியடி கரணவாய் தெற்கில் கடந்த வியாழக்கிழமை இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, சம்பவ தினத்தன்று வீட்டு உரிமை யாளர் திருமண வீட்டுக்கு சென்று விட்டு இரவு நேரம் வீட்டுக்குதிரும்பியுள்ளார்.

இதேவேளை குறித்த மோட்டார் சைக்கிளை வீட்டின் பின்புறத்தில் விட்டு திறப்பை மோட்டார் சைக்கிளில் விட்டு சென்றுள்ளார். மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதை அதிகாலையே வீட்டு உரிமையாளரால் அறிய முடிந்தது.

இத்திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட நபரை நெல்லியடி பொலிஸார் தேடி வருகின்றனர். (2-60)

# சிறுவனை காணவில்லை

(கரணவாய்)

14 வயது சிறுவன் ஒருவன் காணாமற் போயுள்ளார். இவர் கரவெட்டி அம்மன் கோவிலடியை சேர்ந்தவர் என்று தெரிய வருகின்றது.

இவர் நேற்று முன்தினம் பி.ப.4 மணியிலிருந்து காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுரேஸ்குமார் துஷியந்தன் என்ற சிறுவனே காணாமற் போயுள்ளார்.

காணாமற் போனமை தொடர்பில் நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (60)







சங்கமம் வயலின் வாத்திய கலையகம் நடத்தும் 2 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இசை நிகழ்வும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் மங்கள விளக்கேற்றுவதையும் மாணவர்களின் வயலின் இசை நிகழ்வையும் கலந்து கொண்ட விருந்தினர்களுடன் பார்வையாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

815




குட்டிக்குரங்கு கவின், தன் அம்மாவோடு வாழ்ந்து வந்திச்சு.

கவினுக்கு எப்பவும் ஜாலியாக விளையாடணும்;

இஷ்டம்போல சுத்தித்திரியணும்னு ஆசை.

ஆனா அம்மா விடுறதில்லை.

இங்கே போகாதே; அங்கே போகாதேனு ஏகப்பட்ட கண்டிப்புகள்.

ஒருநாள் அம்மாவுக்கும் தெரியாமல் ஆற்றைக்கடந்து கால்போன போக்குல நடக்க ஆரம்பிச்சுது கவின்.

வழியில ஒரு பாறை.

அந்தப் பாறைக்கு மேலே ஏதோ துணி கிடப்பதுபோல தெரிஞ்சிச்சு.

கவின் குரங்கு எப்படியோ கஷ்டப்பட்டு மேலே ஏறிப் போய் பார்த்தால் அது ஸ்கூல் ப்பை.

அந்தப் பையை எடுத்து திறந்து பார்த்தால் உள்ளே எதுவும் இல்லை.

ச்சே... கஷ்டப்பட்டு எடுத்தது வீணாயிருச்சே.

சரி எதுக்கும் இருக்கட்டும்னு ஸ்கூல் பையன் மாதிரி தோளில் மாட்டிக்கிட்டு நடக்க ஆரம்பிச்சுது.

கொஞ்ச நேரத்தில் பசி எடுத்திச்சு.

சாப்பிட பலாப்பழம் இருந்தால் நல்லா இருக்கும்னு நினைச்சது.

அப்படி நினைச்சதும் பை கனமாகிற மாதிரி ஃபீலிங்.

உடனே கவின் அந்தப் பையைத் திறந்து பார்த்திச்சு.

பைக்குள்ளே பலாப்பழம் இருந்திச்சு. அதிர்ச்சி... ஆனந்தம்.

ஆசை ஆசையா எடுத்து நிறைய சாப்பிட்டுச்சு கவின்.

வேகமாக சாப்பிட்டதால் விக்கல் வந்திருச்சு.

ஐயையோ பக்கத்தில தண்ணி இல்லையே.

ஆத்துக்குப் போகணுமேனு கவலைப்பட்டுச்சு.

மறுபடியும் பையில் கனம்.

பார்த்தால் ஒரு வாட்டர் பாட்டில்.

அதை எடுத்து மடக்...மடக்னு குடிச்சுது.

ஆகா.. நினைச்சதைக் கொடுக்கிற அதிசய பை இதுன்னு புரிஞ்சுக்கிருச்சு.

கவினுக்கு ரொம்ப சந்தோசம்.

காடு முழுக்க குஷியாகக் சுத்திச்சு.


அந்த நேரம் மழை தூற ஆரம்பிச்சது.

கவின் குரங்கு மரப்பொந்து ஒன்றில் போய் பதுங்கிக்கிச்சு.

அங்கே ஆமை ஒண்ணு இருந்திச்சு.

அந்த ஆமை முகத்தில கவலைக் கோடுகள்.

என்ன பிரதர் கவலையா இருக்கே?ன்னு கவின் கேட்டுச்சு.



வேற என்ன? ஆண்டாண்டு காலமா நாங்க மெதுவாகவே போயிட்டிருக்கோம்.

வேகமாப் போக முடியலைனு வருத்தப்பட்டிச்சு ஆமை.

கவின் யோசிச்சது.

பேட்டரியில போகிற மாதிரி ஒரு ஸ்கேட் போர்டு இருந்தால் இந்த ஆமைக்குத் தரலாம்னு நினைச்சது.

உடனே ஸ்கூல் பையில ஸ்கேட்டிங் போர்ட்டு வந்திச்சு.

அதை எடுத்து ஆமைக்குக் கொடுத்துச்சு.

மகிழ்ச்சியில் மழையிலும் வேகமாகப் போச்சு ஆமை.

இந்த விஷயம் காடு முழுக்க பரவிச்சு.

எந்த விலங்கு வந்து எதைக் கேட்டாலும் ஸ்கூல் பை மூலம் கொடுத்திச்சு கவின் குரங்கு.

இந்த விடயத்தைக் கேட்ட கரடி ஒண்ணு எப்படியாவது அந்தப் பையைக் குரங்குக்குத் தெரியாம எடுத்துடணும்னு நினைச்சது.

ராத்திரி நேரம் .... குரங்கு தூங்குறப்ப வந்து அந்தப் பையை எடுத்துக்கிட்டு தனியாகப் போய் தோளில் மாட்டிக்கிச்சு.

எனக்கு பெரிய பெரிய நாவற்பழங்கள் நிறைய வேணும்னு நினைச்சது.

அப்புறம், பையைத் திறந்து பார்துச்சு. உள்ளே எதுவுமே இல்லை.

ஏதேதோ நினைச்சு நினைச்சுப் பார்த்து ஏமாந்துபோச்சு கரடி.

ஆகா... குரங்கு நினைச்சது மட்டுமே கிடைக்கும் போல.

இந்த மேட்டரை வேற வழியில டீல் பண்ணணும்னு நினைச்சது.

தன் நண்பர்கள் மூணு பேருடன், குரங்கு இருக்கிற இடத்துக்கு மறுபடியும் போச்சு.

கவின் குரங்கைக் கடத்தி, ஒரு குகையில் கொண்டுபோய் கட்டிப்போட்டு, அதன் முதுகில் ஸ்கூல் பையை மாட்டி விட்டுச்சு.

குரங்கே, நாங்க கேட்கிறத நீ நினைக்கணும்.

இல்லைனா நீ காலின்னு சினிமா வில்லன் மாதிரி மிரட்டிச்சு கரடி.

குரங்கு கவின் யோசிச்சது.

இந்தக் கரடிங்களுக்குத் தெரியாமல் நான் மறைஞ்சுடணும்னு நினைச்சுது.

உடனே கரடிகளோட கண்களுக்குத் தெரியாம குரங்கு மறைஞ்சு போச்சு.

குகைக்கு வெளியே ரொம்பத் தூரத்துக்குப் பறந்துவந்து விழுந்துச்சு குரங்கு.

உழைக்காமல் கிடைச்சதால்தான் இந்தப் பிரச்சினை. இனி இந்தப் பையே வேணாம்னு முடிவு பண்ணி, தன் தலையைச் சுத்தி தூக்கிப் போட்டுட்டு, அம்மாவைத் தேடி நடக்க ஆரம்பிச்சது.

☆☆☆☆☆☆☆☆☆☆☆

05.2014
26

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

➢1538 - ஜோன் கால்வின் மற்றும் அவரது சீடர்கள் ஜெனீவா நகரில் இருந்து வெளியேற்றப்பட்டனர். கால்வின் அடுத்த மூன்றாண்டுகள் பிரான்சின் ஸ்ட்ராஸ்பூர்க் நகரில் வாழ்ந்தார்.

➢1637 - பீக்குவாட் போர்: புரொட்டஸ்தாந்து, மொஹீகன் படைகள் ஜேர்மன் தளபதி ஜோன் மேசன் தலைமையில் ஐக்கிய அமெரிக்காவின் கனெடிகட்டில் பீக்குவாட் இனத்தவர்களின் ஊர் ஒன்றைத் தாக்கி ஐநூறுக்கும் மேற்பட்ட அமெரிக்கப் பழங்குடியினரைக் கொன்றனர்.

➢1879 - ஆப்கானிஸ்தான் அரசை உருவாக்க கண்டமாக் உடன்பாட்டில் ரஷ்யாவும் ஐக்கிய இராச்சியமும் கைச்சாத்திட்டன.

➢1896 - ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாஸ் ரஷ்யாவின் சார் மன்னனாக முடிசூடினான்.

➢1912 - இலங்கையில் இருந்து 7 பேரைக் கொண்ட முதலாவது தொகுதி சிறைக்கைதிகள் அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டனர்.

➢1918 - ஜோர்ஜியா மக்க்ளாட்சிக் குடியரசு அமைக்கப்பட்டது.

➢1966 - பிரித்தானிய கயானா விடுதலை அடைந்து எனப் பெயர் மாற்றம் பெற்றது.

➢1969 - அப்பல்லோ 10 விண்கலம் மனிதனை சந்திரனுக்கு அனுப்பும் தனது அடுத்த திட்டத்திற்கு தேவையான சோதனைகளை வெற்றிகரமாக முடித்து விட்டு பூமி திரும்பியது.

➢1987 - யாழ்ப்பாணம் வடமராட்சியில் இலங்கை ஆயுதப படையினரின் ஒப்பரேஷன் லிபரேஷன் இராணுவ நடவடிக்கை இடம்பெற்றது.

➢2002 - மார்ஸ் ஒடிசி விண்ணூர்தி செவ்வாய்க் கோளில நீர் பனிப் படிவுகள் இருப்பதை அறிந்தது.

பிறப்புகள்

➢1799 - அலெக்சாண்டர் புஷ்கின், ரஷ்யக் கவிஞர் (இ. 1837)

➢1884 - மகா வைத்தியநாத ஐயர், கர்நாடக இசைக் கலைஞர்

➢1943 - மனோரமா தமிழ் நாடக, திரைப்பட நடிகை.

இறப்புகள்

➢1989 - கா. அப்பாத்துரை, தமிழறிஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



52

..."வேதாரண்யத்தில் பிறந்துமா நீ உப்புப் போட்டு உண்ணவில்லை?" என்று பத்துப் பேர் முன்னிலையில் அவனைப் பரிகசித்திருக்கிறேன்; அவன் வருந்தியதில்லை.

யோசித்துப் பார்ப்பேன்.

உடன் பிறந்தவனாவது இப்படி உறுதியாயிருப்பானா? தன் இளைத்த தேகம் களைத்துப் போகும்வரை கரைகிறானே! எனக்கும் இவனுக்கும் என்ன பந்தம்? எல்லாவற்றுக்கும் மேலாய் என்னை அவன் நேசிக்கிறான்.

அந்த நேசத்தினால்தான் சுமைகளைக்கூட சுகமாக்கிக் கொள்கிறான்.

உறக்கத்தில் புரண்டு படுக்கையில் நள்ளிரவு ஒரு மணிக்கு எப்போதாவது எனக்கு ஒரு சிந்தனை வரும். உடனே இண்டர்காமில் அவனைக் கூப்பிட்டுக் குறித்துக் கொள் என்பேன்.

அப்போதெல்லாம் அவன் குரலில் தூக்கத்தின் கரகரப்பு இருந்ததுண்டே தவிர, தூக்கம் கலைக்கப்பட்டதே என்ற துக்கத்தின் கரகரப்பு இருந்ததேயில்லை.

எப்போதாவது நினைத்துப் பார்ப்பேன். எந்த நேரத்திலும் இவன் எனக்குக் கூப்பிடு தூரத்திலேயே இருக்கிறானே!

இவனுக்கென்று தனி வாழ்க்கை இருக்கிறதா இல்லையா?


ஒருநாள் ரயிலில் இவனை நினைத்துக் கொண்டே நான் படுத்திருந்தபோது என் கண்களிலிருந்து கடகடவென்று கண்ணீர் கொட்டியது.

அவனை நான் உள்ளூர நேசிக்கிறேன்; ஆனால் ஒருபோதும் வெளிப்படுத்தியதில்லையே என்று என்னை நானே நொந்து கொள்கிறேன்.

நம்முடைய நரக வாழ்க்கையில் அன்பு காட்டத்தான் ஓர் அப்பாயின்ட்மென்ட் கிடைப்பதில்லையே.

பாஸ்கரன் சிக்கனவாதி.

அவன் பையிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு ஐந்து காசுக்கும் தலைப் பிரசவம்தான்.




கலைஞர் மூன்றாம் முறை முதல்வராவதற்கு முன்பு அவரிடம் இவனை அறிமுகம் செய்தேன்.

அவரை வணங்கிப் பணிந்தான்.

அவன் பையிலிருந்த சில்லரைகள், தேர்தல் தோல்விக்குப் பின் கூட்டணிகள் மாதிரி சிதறி ஓடின.

அந்த ஹாலிலும், கலைஞர் காலிலும் கிடந்த சில்லரைகளை அவசரப்படாமல் தேடி எடுத்து, கையில் சேர்த்துக் கணக்குப் பார்த்துவிட்டுத்தான் வெளியேறினான்.

கொஞ்சம் குறைந்தாலும் கலைஞரையே கேட்டிருப்பானோ என்று கலங்கிப் போனேன்.

சில்லரை விஷயத்தைக்கூட அவன் சில்லரை விடயம் என்று கருதுவதில்லை.

என்னைச் சார்ந்தவர்களில் யாருக்கும் சமூக மரியாதை என்பது அவர்களால் வரவேண்டுமே தவிர என்னால் வரக்கூடாது என்று எண்ணுகிறவன் நான்.

இந்த என் விதியை நான் என் தாய் தந்தையர் வரைக்கும் நீட்டிக்கிறேன்.

அந்த வகையில் இன்று பாஸ்கரனுக்கு இருக்கும் போதுமான சமூக மரியாதை என்னால் வந்ததில்லை.

அவனால் வந்தது; அவன் ஆற்றலால் வந்தது.

ஒரு காளான் மாதிரி இங்கே வந்தவன் இன்று வேம்பாய் வேரோடிவிட்டான் என்கிறபோது விம்முகிறது மனசு.

நான் சரியான வில்;
அவன் சரியா அம்பு.

என் பலங்களையும் அவன் அறிவான்; சின்னச் சின்ன பலவீனங்களையும் அவன் அறிவான்.

எனக்கே மறந்துபோன என் வாழ்க்கையின் இரண்டாம் பாகத்தை அவன் தன் இருதயச் சுவர்களில் எழுதி வைத்திருக்கிறான்.

அவனை நினைக்கும் போதெல்லாம் நான் பாரதியின் பாடலை பாட பேதத்தோடு முணுமுணுக்கிறேன்.

"எங்கிருந்தோ வந்தான்
தமிழ்ச்சாதி நானென்றான்
இங்கிவனை யான்பெறவே
என்னதவம் செய்துவிட்டேன்!"

(தொடரும்)

-வைரமுத்து-

# உங்கள் பிறந்த எண் 03 இல் கூட்டெண் 03 இன் பலன்கள்



13

### தோற்றம்

இவர்கள் குருவுடன் குரு சேர்ந்த ஆதிக்கமுடையவர். இவர்களுக்கு நல்ல உயரமான வடிவம் இருக்கும். உடல் சற்றுப் பருமனாக இருக்கும். வாட்ட சாட்டமாக பெரிய தோற்றமிருக்கும். வழுக்கை சீக்கிரம் விழும். சற்று உப்பிய வயிறு இருக்கும். கண்களில் அறிவுத் தீக்ஷணியம் இருக்கும். பற்கள் ஒழுங்கான வரிசையில் சரியான அளவில் அமைந்திருக்கும். தாடை உறுதியாக சதைப்பிடிப்புடன் கெட்டியான கழுத்து (குறுகியது) தோளுடனிருக்கும். சிறு வயதிலேயே பெரியவர் போல இருப்பர்.

### குணம்

மிகவும் ஒழுங்காக, குடும்ப வழக்கப்படி பரம்பரை ஆச்சாரத்தை விடாமல் வாழுவர். பண்பான செயல்களைச் செய்வர். நன்கு கல்வி கற்பர். தூய ஆடையுடன் நல்ல மங்களகரமான பேச்சுடன் இருப்பர். தெய்வ பக்தி, பூஜை புனஸ்காரம்து, நிதானமாகப் பேசி நடத்தல் இருக்கும்.

தற்பெருமையும் புகழாசையும் தாம் நல்லவர் என்ற பெருமிதமும் இருக்கும். இவர்கள் அசாத்திய தன்னம்பிக்கையும் கோபமும் உடையவர். சிறந்த நிர்வாகிகளான இவர்கள் கோபப்படவே செய்வர். கடமையில் விட்டுக் கொடுக்கமாட்டார். மற்றவரிடமும் இப்படிப்பட்ட பக்குவத்தை தூய்மையை எதிர்பார்ப்பார். ஏமாற நேர்ந்தால் அதிருப்தி அடைவர். கோபமும் கண்டிப்பும் காட்டுவர். தண்டிக்கவும் செய்வர்.

போராடத் துணிவுள்ள இவர்கள் தந்திரமும் சூழ்ச்சியும்கூடத் தம்கட்சி வெல்லக் கடைப் பிடிப்பர். தோல்வியைத் தாங்க முடியாமல் புலம்புவர். காரிய வெற்றிக்கு எப்படியும் நடப்பர். மிகவும் தயக்கம் இருக்கும்.

பெண்களால் தொல்லையடைவர். இவர் பிறர் நம்பிக்கைக்கு உரியவராக நடப்பர். பிறர் வெற்றிக்கு யோசனை அளிப்பர். இரக்கப்பட்டாலும் பொருளை எடுத்து வழங்கும் தாராளமிருக்காது. தம் மதம் இனம் குடும்பம் என 'நான், என்' என்ற பற்றனைத்தும் உள்ளவர். கொள்கையைப் பற்றுடன் போதிப்பர். பேச்சுத் திறமை அசாத்தியமாக இருக்கும்.

பொதுநலம் நாடி பொது வேலைகளில் ஈடுபட்டாலும் தன் நலம் நாடி அடைவர். புகழ்த் தாகம்தணியாது. புதிய அமைப்புக்களைத் தொடங்குவர். உலகம் புகழும் செயல்களைப் புரிவர்.

பிறந்தகூட்டுஎண்களிரண்டும் மூன்றாகவே இருப்பதால் [illegible] யும் அறிந்து [illegible] இணைத்து வைத்துக் கொள்ளவும். 1 அல்லது 4 வந்தால் மிகவும் அதிஷ்ட மாக அமையும்.

### குடும்பம்

கவர்ச்சி மிக்க இவர்களுக்கு நல்ல மனைவி வாய்ப்பாள். உழைத்து மேலும் மேலும் முன்னேறுவர். குடும்பத்தில் கோணல்கள் ஏற்பாட்டாலும்குழந்தை குட்டிகளுடன்சாமளித்துக்கொண்டு வாழ்வர். மன்னிப்பதும் பெருந்தன்மையும் காட்டுவர். ஏராளமான பொருளும் சம்பாதித்து நல்ல வசதிகளை எல்லோருக்கும் அனுபவிக்க ஏற்பாடு செய்திருப்பர். பிற்காலத்தில் அமைதியாக குடும்பமே ஆறுதல் தரும்.

நீண்ட நாள் சகல போகங்களுடன் வாழுவர். இவர்கள் ஆன்மிகம் எவ்வளவு பேசினாலும் துறவியாக மாட்டார். இதேபோல அரசியல் தொடர்பு இருந்தாலும் அரசியல் போட்டிகளில் கலந்து கொண்டு பதவி பெறவும் மாட்டார். வீடு, வாசல், போகம், புகழ் இவற்றை இவரால் விட்டுவர இயலாது.

### தொழில்

அநேகமாக ஆரம்பத்தில் இவர்கள் சாதாரணமாகவே வாழ்க்கையை தொடங்குவர். பேச்சில் சிறந்து அதனால் சிறந்த புகழும் பொருளும் பெறுபவர் உண்டு. சட்ட நிபுணத்துவ[illegible]கிப் புகழ் பெறலாம். ஆன்[illegible]ம் ஆகி இறவாப்புகழ் பெறலாம். நம்பிக்கைக்கும் நற்பெயருக்கும் உரியவர் மட்டுமே பார்க்க வேண்டிய வேலைகளையும் பார்ப்பர். ஆசிரியர்களாக இருப்பர். அரசு அலுவலகம், தனியார் நிதி நிறுவனம், வங்கிகள் முதலியவற்றில் இருப்பர்.பேராசிரியர், நீதிபதிகள் என இருப்பர். நியாயவாதிகளான இவர்கள் எளிமையாக வாழ்வர். சொந்தத் தொழில் செய்தும் வெற்றி காணுவர்.

### நோய்

இரத்தம், சுவாசம் தொடர்பான நோய்கள் அடைவர். நரம்புத் தளர்ச்சி, மனச்சிதைவு ஏற்படலாம். காரணம் அதீத கோபமும் மிகவும் பிற உணர்ச்சிவசப்படுத்துவதும் ஆகும். உடலில்நீர் அதிகம்சேரலாம். எக்ஸிமா போன்ற தோல் நோய்கள் தாக்கும். சிறு வயதில் தாக்கிய நோய் மீண்டும் வரலாம். உடற்பயிற்சி, நல்லுணவு நோய்களைத் தவிப்பன.

(தொடரும்)

-கணித்தவர்-ஸ்வாமி-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் அழைப்பை விக்கி நிராகரித்தமை தவறாகும்

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு



**இந்திய பிரதமராக பதவியேற்கவுள்ள நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்வதற்காக செல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவில் கலந்து கொள்ளுமாறு வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு விடுக்கப்பட்ட அழைப்பை அவர் நிராகரித்துள்ளமையானது அரசியல் சுய இலாபத்தை நோக்கமாக கொண்டது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன் நோன்புகை அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

இனவாத அடிப்படையிலான செயற்பாடுகளினூடாக் தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதிலும் தொடர்வதிலுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆர்வம் காட்டி வருகின்றது. மாறாக தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றை பெற்றுக் கொடுப்பதில் அவர்களுக்கு அக்கறையில்லை. இந்த நிலைமையை முதலமைச்சர் விக்னேஸ்வரனாவது மாற்றியமைக்க முயல்வார் என்று எண்ணியிருந்தோம். ஆனால் அவரும் பிரிவினைவாதத்தின் மூலம் அரசியலை தொடர்வதையே விரும்புகிறார் என்பது தற்போது வெளிப்பட்டுள்ளது

ஜனாதிபதியின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொள்ள முடியுமானால் ஏன் அவருடனான இந்திய விஜயத்தை நிராகரிக்க வேண்டும். எனவே விக்னேஸ்வரனும் சாதாரண பிரிவினைவாத அரசியல்வாதியொருவரே என்பதை வெளிப் படுத்தியுள்ளார்.

இனவாத மற்றும் பிரிவினைவாத செயற்பாடுகளை முன்னெடுத்தால் தொடர்ந்தும் வடக்கில் வெற்றிபெற்று அரசியலை தொடரலாம் என்ற எண்ணம் விக்னேஸ்வரனுக்கும் தற்போது வந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அதனால்தான் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் பெரிதாக அக்கறை காட்டாமல் பிரிவினைவாத செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார். (2)

# ஆளும் தரப்பு முக்கியஸ்தர்கள் விரைவில் எதிரணிக்கு வருவர்

## ஐ.தே.க. காத்திருப்பு

இந்த அரசாங்கத்தின் மீதும் ஜனாதிபதியின் மீதும் அதிருப்தி கொண்ட பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் ஆளும் தரப்புக்குள் இருக்கின்றார்கள். அவர்கள் வெகுவிரைவில் இந்த ஊழல் மிக்க அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு எதிரணியில் இணைவார்கள் என்று ஐ.தே.கவின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொண்ட அமைச்சர்கள் பலர் பொதுவான அடிப்படையில் எம்முடன் இணைந்து செயற்படுவது தொடர்பாக பேசி வருகிறார்கள். எனவே நாடாளுமன்ற அல்லது ஜனாதிபதித் தேர்தலொன்று வரும் போது அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக எதிரணியில் இணைந்து ஒத்துழைப்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் அரசாங்கத்துக்கு உள்ளேயே தற்போது ஆரம்பித்துள்ளது. சில அமைச்சர்கள் நேரடியாக அரசாங்கத்தை விமர்சிக்க ஆரம்பித்துள்ளார்கள். மேலும் பலர் மறைமுகமாக இந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க ஆரம்பித்துள்ளார்கள்.

அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று அரசாங்கத்துக்குள்ளிருக்கும் சுமார் 50 பேர் வரை இவ்வாறு மிகுந்த அதிருப்திக்கு மத்தியில் இருந்து வருகிறார்கள். இவ்வாறானவர்களுடன் நாம் பேச்சுக்களை நடத்தி வருகின்றோம். எனவே தகுந்த நேரத்தில் அவர்கள் யார் யார் என்பதை காண முடியும்.

குடும்ப ஆட்சியில் ஊழல் தலைதூக்கியுள்ளது. இதனை இல்லாதொழித்து நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உள்ளது. அதற்கான நகர்வுகளை நாம் இப்போது ஆரம்பித்துள்ளோம்.

இந்தியாவில் குடும்ப ஆட்சிக்கும் ஊழலுக்கும் எதிராக பாரிய பிரசாரங்களை முன்னெடுத்த நரேந்திர மோடி அமோக வெற்றி பெற்றுள்ளார். அவ்வாறான ஒரு நிலைமை இலங்கையிலும் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார். (2)

# நளினி - முருகன் வேலூர் சிறையில் சந்திப்பு

(சென்னை)

ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்ற முருகன், அவரது மனைவி நளினி இருவரும் நேற்று முன்தினம் சந்தித்து பேச அனுமதிக்கப்பட்டனர்.

முருகன், அவரது மனைவி நளினி இருவரும் வேலூர் சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர்.

இவர்கள் 15 நாட்களுக்கு ஒருமுறை சந்திப்பது வழக்கம்.

அதன்படி நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் டிஎஸ்பி பன்னீர்செல்வம் தலைமையிலான பொலிசார் வேலூர் சிறையில் இருந்த முருகனை பலத்த பாதுகாப்புடன் பெண்கள் சிறைக்கு அழைத்து சென்றனர்.

அங்கு இருவரின் அரைமணி நேரச் சந்திப்புக்கு பின்னர் மீண்டும் முருகனை அழைத்து சென்று ஆண்கள் சிறையில் அடைத்தனர். (2)

# இந்திய மீனவர்களை விடுதலை செய்யுமாறு மஹிந்த உத்தரவு

இலங்கை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து இந்திய மீனவர்களையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவை முன்னிட்டு, நல்லெண்ண நடவடிக்கையாக இவ்வுத்தரவினைப் பிறப்பித்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மோடியின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மறுநாள் மோடியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என தெரிவிக்கப்படுகிறது. (2)



அச்சுவேலியில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டையில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டத்தை வடமாகாண ஆளுநர் சந்திரசிறி அண்மையில் பார்வையிட்டார். இதன்போது வடமாகாண தொழில் துறை பணிப்பாளர் கே.சிவகரன் உடன் இருந்தார்.

(படம்:என். குமார்)

# புகலிடக் கோரிக்கையாளர்களின் அகதி அந்தஸ்து கோரிக்கை பரிசீலிக்கப்படும்

நவுறுதீவு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள் 21 பேரின் அகதி அந்தஸ்துக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் குடிவரவு அமைச்சர் மொரிசன் மேற்கொண்ட அறிவித்தலின் பிரகாரம், நவுறு மற்றும் பப்புவா நியூகினியாவின் மானுஸ் தீவில் தமது புகலிடக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 70ஐ எட்டியுள்ளது.

சுமார் 250 பேர் சுயவிருப்பத்தின் பேரில் சொந்த நாடுகளுக்கு திரும்பினார்கள் எனவும் அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது எனவும் மொரிசன் தெரிவித்தார். சமகால அரசாங்கம் ஆட்சி பீடமேறிய தைத் தொடர்ந்து Operation Sovereign Borders என்ற திட்டத்தின் கீழ் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துள்ள தாகவும் தற்போது சுமார் ஆயிரத்து 200 பெயர் மாத்திரம் உள்ளதாகவும் ஏனையோர் சுயவிருப்பத்தின் பேரில் நாடுகளுக்கு [illegible] மொரிசன் தெரிவித்துள்ளார். (2)

# இலஞ்சம் பெற்ற கான்ஸ்டபிள் கைது

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாகன விபத்துடன் தொடர்புடைய சாரதி ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காதிருப்பதற்காக குறித்த கான்ஸ்டபிள் 3 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக் கொண்டுள்ளார்.

கிராதுரு கோட்டை பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் கிராதுரு கோட்டை பொலிஸ் பிரிவில் கடமையாற்றுபவர் என தெரியவந்துள்ளது. இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு இந்த கைது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கரடி தாக்கியதில் இருவர் வைத்தியசாலையில்

காட்டில் தேன் எடுக்கச் சென்ற இருவர் கரடியின் தாக்குதலுக்குள்ளாகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு வாகரை கட்டுமுறிவு காட்டில் இடம்பெற்றுள்ளது.

பால்சேனை கதிரவெளியைச் சேர்ந்தவர்களான கி.ஜெயரெட்ணம் வயது (38), க.குணலிங்கம் வயது (30) ஆகிய இருவரே கரடியின் தாக்குதலுக்குள்ளாகி கதிரவெளி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக மேலும் தெரிவித்தனர்.

வழமைபோன்று தேன் எடுக்கும் தொழிலுக்கு அடர்ந்த காட்டிற்கு சென்ற வேளை குட்டி ஈன்ற கரடி ஒன்று மேற்படி நபர்களை கண்டதும் கோபம் கொண்டு தாக்கியுள்ளது.

இதில் இருந்து தங்களை காப்பாற்றிக்கொள்வதற்காக மரத்தில் ஏறி உயிர் தப்பியுள்ளனர். இதனால் இவர்களின் கால்கள் மற்றும் கைகளில் காயம் ஏற்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர். இதேவேளை மேலும் ஒருவர் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு இதேபோன்று கரடியின் தாக்குதலுக்குள்ளாகி காயமுற்ற நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்

## ஐ.நா.விசேட பிரதிநிதி அறிக்கையில் சுட்டிக்காட்டு



**இலங்கையில் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பில் மனிதவுரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி சாலோகா பெயானி ஐ.நா.மனிதவுரிமைகள் சபையில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளார்.**

அடுத்த மாதம் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் 26 ஆவதுஅமர்வுகள் ஜெனீவாவில் நடைபெறவுள்ளது. இதன்போதே அவர் அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

ஏற்கனவே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கையில் யுத்தத்தின் பின்னர் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தொடர்ந்தும் உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

யுத்தத்தின் பின்னர் தொடர்ந்தும் இடம்பெயர்ந்து வாழ்வோரின் எண்ணிக்கை மற்றும் சொந்தக் காணிகளில் மீள்குடியேற்றப்படாதோர் தொடர்பில் சரியான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இடம்பெயர் மக்களுக்கு நிரந்தரமான ஓர் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட அல்லது மீள்குடியேறிய மக்களின் பல்வேறு அடிப்படைத் தேவைகள் இதுவரையில் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை.

வாழ்வாதாரம், சமூக நலன் மற்றும் நிரந்தர வீடுகள் போன்ற பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து கவனிக்கப்பட வேண்டியது அவசியமானது.

மோதல்கள் இடம்பெற்ற பகுதிகளில் கண்ணிவெடி அகற்றுதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கட்டியெழுப்ப இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் வரவேற்கப்பட வேண்டியவை.

அனைத்து இடம்பெயர் மக்களினதும் பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வுகளை வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மேலும், இடம்பெயர் மக்கள் தங்களது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கு தேவையான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டும் போன்ற விடயங்கள் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (2)

## ஜனாதிபதி பிரணாப் முன்பாக மோடி பதவிப் பிர்மாணம்

(சென்னை)

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி இன்று திங்கட்கிழமை பதவியேற்கிறார்.

இந்தியக் குடியரசுத் தலைவரின் மாளிகையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் அவருக்குப் பதவிப் பிரமாணம், இரகசியக் காப்புப் பிரமாணம் ஆகியவற்றை குடியரசுத் தலைவரான ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி செய்து வைக்கவுள்ளார்.


இந்தியாவில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி பெரும்பான்மை பெற்ற ஆட்சியமைக்கும் அதிகாரத்தைப் பெற்றது. ஆட்சியமைப்பது தொடர்பாக பா.ஜ.க. கூட்டணிக் கட்சிகளின் கூட்டம் இந்திய நாடாளுமன்றில் நடந்தது.

இதில் மோடி தலைமையில் மத்தியில் ஆட்சி அமைக்க ஒருமனதாக ஆதரவு தெரிவித்து தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை மோடி நேரில் சந்தித்து ஆட்சியமைப்பதற்கான உரிமை கோரி கடிதத்தை வழங்கினார்.


இதைத் தொடர்ந்து குடியரசுத் தலைவரின் செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மத்தியில் நரேந்திர மோடி தலைமையிலான புதிய அரசு இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்குப் பதவியேற்கும்.

அதில் பிர்தமர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களுக்கும் பதவிப் பிரமாணம், இரகசியக் காப்புப் பிரமாணம் ஆகியவற்றை குடியரசுத் தலைவர் செய்து வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)



இணுவில் திருவருள் பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில் வருடாந்த மஹோற்சவத்தில் கொடியேற்றம் அண்மையில் இடம்பெற்ற போது... (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

## 12 அம்சக் கோரிக்கைகள் ஜனாதிபதியிடம் கையளிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

விமல் வீரவன்ச கடந்த காலங்களாக அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருவதுடன் அவர் மீது பல விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் அரசாங்கத்துக்கும் அவருக்கும் இடையிலான ஐயப்பாடுகளை தீர்த்துக் கொள்ளும் வகையில் இந்த சந்திப்பு நடைபெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் தேசிய சுதந்திர முன்னணியின் வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 12 அம்ச கோரிக்கைகளும் இதன்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (2)

## இலங்கையர் மூவர் மலேசியாவில் கைது

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மலேசியாவின சிலாங்கூர் பிரதேசத்தில் இலங்கையர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மலேசிய பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கடந்த 15ஆம் திகதி மேற்கொண்ட தேடுதலின்போது சந்தேக நபர்கள் மூவரும் கைதாகியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள ஒருங்கிணைக்க இவர்கள் முயற்சித்துள்ளதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் கடந்த 2004 ஆம் ஆண்டு மலேசியா சென்றுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துககாக பிரசாரம் செய்து நிதி சேகரிக்கும் முயற்சிகளில் சந்தேகநபர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் குடிவரவுச் சட்டத்தின் கீழ் மலேசியாவில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (2)

## ஹெல உறுமய தூதுக்குழுவினர் சோபித தேரரை இன்று சந்திப்பர்

(கொழும்பு)

அமைச்சர் சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஜாதிக ஹெல உறுமயவின் தூதுக்குழு ஒன்று சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் தலைவர் வண.மாதுளுவாவே சோபித தேரரை நாளை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாதொழிப்பது தொடர்பாகவே இச் சந்திப்பின் போது முக்கியமாக ஆராயப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பது குறித்து மாதுளுவாவே சோபித ரேர் பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் ஏற்கனவே பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. என்பவற்றுடன் ஏற்கனவே அவர் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

அதன் தொடர்ச்சியாகவே அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவுடன் அவர் இப்போது பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

நாட்டில் சமூக நீதி, நல்லாட்சி, சட்டம்- ஒழுங்கு-ஜனநாயகத்தை உருவாக்கும் விடயங்களில் தேவையானபோது எமது உபாயங்களை மாற்றிக் கொள்வதற்குத் தயாராகவிருக்கின்றோம் எனத் தெரிவித்த மாதுளுவாவே சோபித தேரர், ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. தலைவர்களுடன் மேற்கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# “அப்படிச் சொல்லக்கூடாது அத்வானிஜி”

**மைய மண்டபக் கண்ணீர் காட்சிகள்!**

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் காட்சி பரபரப்பாக நடந்து முடிந்திருக்கிறது.

நரேந்திரமோடி தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சி தொடங்குகிறது. கம்பீரமானவர், தைரியசாலி என்று வர்ணிக்கப்பட்ட மோடி, கண்ணீருடன் தன் பேச்சைத் தொடங்கியது பலரையும் ஆச்சரியப்படுத்தியது. **உள்ளுக்குள் இன்னொரு மனிதர் இருக்கிறார்** என்பதையே இது வெளிப்படுத்தியது.

**ஆனந்தக் கண்ணீர்!**

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் கண்ணீர் காட்சிகள் அரங்கேறுவது இது முதன்முறை அல்ல. 2004 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி சோனியா காந்தியை காங்கிரஸ் கட்சி சார்பில் மக்களவைத் தலைவராக தேர்ந்தெடுத்தனர். அவர்தான் பிரதமராகக் கருதப்பட்டார். தனது கட்சியினரின் கடிதத்தை எடுத்துக் கொண்டு குடியரசுத் தலைவர் மாளிகைக்குச் சென்று வந்த பின்னர், சோனியா மனநிலை மாறியது. பின்னர் மீண்டும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தை இதே மைய மண்டபத்தில் கூட்டினார் சோனியா. எனக்கு இந்தப் பதவியில் விருப்பம் இல்லை என்று சொன்னார். தன்னுடைய தேர்வை, தானே இரத்துச் செய்தார். அந்தக் கூட்டத்தில் இருந்த காங்கிரஸ்காரர்கள் மத்தியில் ஒரே அழுகுரல். நீங்கள்தான் பிரதமராக இருக்க வேண்டும் என்று கதறினார்கள். ஆனால், சோனியா ஏற்கவில்லை. மன்மோகன் சிங், பிரதமராக தேர்வு செய்யப்பட்டார். இப்போது காட்சி வித்தியாசமானது. ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மோடி, தன்னுடைய ஆனந்தம் தாங்க முடியாமல் கண்ணீர் விட்டார்.

**விழுந்து வணங்கிய மோடி!**

நரேந்திர மோடிதான் பிரதமர் வேட்பாளர் என்று தேர்தலுக்கு முன்பே அறிவிக்கப்பட்டது. எனவே, அவரை மீறிய ஒருவரை பி.ஜே.பியால் பிரதமராகத் தேர்வு செய்ய முடியாது. ஆனாலும், அந்த சடங்கைச் செய்யாமல் இருக்க முடியாது அல்லவா? அதனால்தான் பி.ஜே.பி.எம்.பிக்கள் 282 பேரும் மைய மண்டபத்தில் கூடினர். நாடாளுமன்றத்துக்குள் படிக்கட்டில் கால் வைக்கும் முன்பு தலை குனிந்து தொட்டு வணங்கிவிட்டு உள்ளே சென்றார் மோடி. சமீபகால வரலாற்றில் இப்படி ஒரு காட்சி அரங்கேறியது இல்லை.

இதுவரை மோடியை நிராகரித்து வந்த அத்வானிதான், அவரது பெயரை இந்தக் கூட்டத்தில் முன்மொழிந்தார். நரேந்திரமோடியை **நரேந்திர பாய்** என்று பெருமையாக அழைத்து, கட்சியின் மக்களவைத் தலைவராகவும் நாடாளுமன்றத் தலைவராகவும் தேர்வு செய்ய முன்மொழியவும் செய்தார் அத்வானி. அதை வழி மொழிந்தவர் முரளிமனோகர் ஜோஷி. அத்வானி முன்மொழிய, ஜோஷி வழி மொழிய... அமைதியாக உட்கார்ந்து கவனித்துக்கொண்டிருந்தார் மோடி.

இந்தத் தேர்வுக்குப் பின்னர் பி.ஜே.பி. தலைவர்கள் மோடிக்கு வாழ்த்து கூறினர். அத்வானி கண்கள் கலங்க, எனக்கு ஒரு பலவீனம் உண்டு. என்னால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாது. நம்முடைய கட்சியின் வரலாற்றில் இது மறக்க முடியாத தருணம். நரேந்திரபாய், நம்முடைய கட்சியை உயரத்தூக்கிவிட்டார்என்று சொல்லி கண்ணீர்விட்டார்.

நாடாளுமன்ற மைய மண்டபத்துக்கு வந்து அமரும் முன்பும், அத்வானியின் காலில் விழுந்து வணங்கினார் நரேந்திர மோடி. இந்த வாழ்த்துரைக்குப் பின்னர் அத்வானி மோடிக்கு பொக்கே கொடுக்கும்போதும் மோடி அவர் காலை தொட்டு வணங்கினார். அப்போது இருவர் கண்களும் குளமாகின.

**ராஜ்நாத் சிங் தந்த கர்ச்சிப்!**

அந்தக் கூட்டம் முழுக்கவே உணர்ச்சிமயமான மனிதராகவே இருந்தார் மோடி. எல்லா மேடைகளிலும் குரல் உயர்த்திப் பேசும் மோடி, அன்றைய தினம் அமைதியாகத் தொடங்கினார். அத்வானிஜி பேசும்போது, கட்சிக்கு மோடி உதவி செய்துவிட்டார் என்று சொன்னார். அத்வானிஜி இப்படிப்பட்ட வார்த்தையை உபயோகப்படுத்தக்கூடாது.

தாய்க்கு மகன் செய்தால் அது உதவியா? கட்சியும் நாடும்தான் எனக்குத் தாய். மகன் தாய்க்கு செய்வது உபயமோ, உதவியோ, பெருந்தன்மையோ அல்ல. அவன் தாய்க்கு செய்வது கடமை. இது கட்டாயம். அந்தக் கடமையைச் செய்தேன் என்றவரால், தொடர்ந்து பேச முடியவில்லை. தொண்டை அடைத்தது. வார்த்தைகள் வரவில்லை. தலையைத் தாழ்த்திக் கொண்டார். தண்ணீர் தாருங்கள் என்று கேட்டார். அவருக்குத் தண்ணீர் கொடுக்கப்பட்டது. கண்ணீரைத்துடைக்க கர்ச்சிப்பை அனுப்பினார் ராஜ்நாத் சிங். சிறிது இடைவெளிக்குப் பிறகு என்னால் மட்டும் நான் உயரவில்லை. இன்றைய தினம் நான் இந்த உலகுக்குத் தெரிகிறேன் என்றால், அதற்குக் காரணம் கட்சியின் மூத்த தலைவர்கள் என்னை தோளில் வைத்து எடுத்து சென்றதுதான். மாபெரும் தலைவர் அடல் பிஹாரி வாஜ்பாய் இங்கே இல்லையே என்று சொல்லி அப்போதும் உணர்ச்சிவசப்பட்டார்.


**எனக்கு அவநம்பிக்கை**



**பற்றித் தெரியாது!**

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றி கூறி மோடி பேசும்போது, தன்னுடைய மாநிலத்தைச் சேர்ந்த இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேல் பெயரை எடுக்கவில்லை. பண்டித் தீன்தையாள் உபாத்யாவின் கனவையும் வரப்போகிற அவரது நூற்றாண்டு விழாவையும் நினைவு கூர்ந்தார். பின்னர் அவர் பேசும்போது, உலகத் தலைவர்கள் என்னை வாழ்த்த அழைத்தபோது நான் இங்கே வரக் காரணம் கோடிக்கணக்கான எங்களது வாக்காளர்கள். எங்கள் அரசியல் சாசனத்தில் சாதாரணப்பட்ட ஏழையும் உயரத்தை அடைய முடியும். எங்கள் ஜனநாயக சக்தியின் அடையாளம் இது என்று குறிப்பிட்டேன்.

எனக்கு அவநம்பிக்கையைப் பற்றி தெரியாது. நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன். அவநம்பிக்கையை இந்த நாட்டில் இருந்து விரட்ட வேண்டும் என்ற ஒரே ஒரு நம்பிக்கையில் இந்த நாட்டை உருவாக்க முடியும். 125 கோடி மக்களும் ஒரு அடி முன்னெடுத்து வைத்தால் நாட்டில் 125 கோடி படிகளை முன்னோக்கி நகர்த்த முடியும். புதிய ஒரு நம்பிக்கை சாதாரண மனிதனிடம் எழுந்துள்ளது. இந்தத் தேர்தல் முடிபின் முக்கியத்துவம் இதுதான். இது ஏழையின் அரசாங்கம். இந்த புதிய அரசு ஏழைகளுக்கும் கோடிக் கணக்கான இளைஞர்கள், தாய்மார்கள், சகோதரிகள், ஒடுக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய மக்களுக்குமான அரசு. ஒரு தொங்கு நாடாளுமன்றமோ அல்லது இரு வேறு தீர்ப்புகளையோ மக்கள் கொடுத்திருந்தால், ஓர் அரசாங்கத்துக்கு எதிராக தங்கள் கோபத்தை, எதிர்ப்பைக் காட்டியிருக்கலாம் என்று சொல்லலாம். ஆனால், அவர்கள் பி.ஜே.பிக்கு அறுதிப் பெரும்பான்மை கொடுத்து வாக்களித்துள்ளது அவர்கள் நம்பிக்கை. நான் அவர்களின் நம்பிக்கைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும். ஐந்தாண்டு ஆட்சிக்குப் பின்னர் நான் நாட்டு மக்களுக்கு ரிப்போர்ட் கார்டை கொடுப்பேன் என்றார் மோடி.



**335 பேர் கையெழுத்து!**

இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் மோடிதலைமையிலான ஆட்சியை ஆதரிக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டமும், அதே மைய மண்டபத்தில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் பேசிய தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் சந்திர பாபு நாயுடு, உணவு, உறக்கம் இன்றி மோடி மேற்கொண்ட பிரசாரம்தான் இந்த வெற்றியைக் கொடுத்தது. 2019 திலும் மோடி தான் பிரதமர் என்று அட்வான்ஸாக வாழ்த்தினார். இதன் பின்னர் மோடிக்கும் பி.ஜே.பி. தலைமையிலான ஆட்சிக்கும் ஆதரவு தெரிவிக்கும் வகையில் என்.டி.ஏ. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் குடியரசுத் தலைவர் மாளிகைக்குச் சென்று ஆதரவுக் கடிதம் கொடுத்தனர். சுமார் 18 கட்சித் தலைவர்களின் கடிதமும் 335 புதிய உறுப்பினர்களின் கையெழுத்தும் கொண்ட பட்டியலும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடம் ராஜ்நாத் சிங் கொடுத்தார்.

**சஸ்பென்ஸ் மோடி!**

இன்று திங்கட்கிழமை பதவி ஏற்பு விழா குடியரசுத் தலைவர் மாளிகைக்கு முன்புள்ள திறந்த வெளியில் நடக்கிறது. யார் யார் அமைச்சர்கள் என்பது இன்னும் தெரியவில்லை. அத்தனையும் மோடி சஸ்பென்ஸாக வைத்திருக்கிறார். உள்துறையும் நிதித்துறையும் கட்சியின் மூத்த தலைவர்களாகக் கருதப்படும் ராஜ்நாத் சிங்குக்கும் அருண் ஜெட்லிக்கும் தான் கொடுக்கப்படும்; வெளியே இருந்து யாரும் அழைத்துவரப்பட மாட்டார்கள் என்ற பேச்சு பலமாக இருக்கிறது. இருந்தாலும், நிதித்துறையை எதிர்பார்த்திருக்கும் அருண் ஜெட்லியிடம் மோடி, நீங்கள் வெளியுறவுத் துறையை எடுத்துக் கொள்ளுங்கள். இந்தியாவின் பெயர் வெளியே மிகவும் மோசமடைந்துள்ளது. உங்களால் மட்டுமே நன்றாகப்பேச முடியும். உங்களால்தான் இந்தியாவின் இமேஜை உயர்த்த முடியும் என்று சொல்ல.. ஜெட்லிக்கு ஷாக்.

இப்படி மோடி யாருக்கு என்ன துறையை யோசித்து வைத்திருக்கிறார் என்பது தெரியாமல் பி.ஜே.பி. வட்டாரம் ஏக எதிர்பார்ப்பில் இருக்கிறது. **மோடி என்றாலே எதிர்பார்ப்புத்தான் போல!**

-இணையம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணை ஆணைக்குழு தலைவராக கோபி அனான்

## ஆலோசிக்கிறார் நவிப்பிள்ளை

(கொழும்பு)

இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளுக்காக ஐக்கிய நாடுகள் மனித வுரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் அமைக்கப்படவுள்ள விசாரணைக் குழுவுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் கோபி அனான் தலைவராக நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் கூறுகின்றன.

சமாதானத்துக்கான நோபல் பரிசு வென்றவர் கோபி அனான். இலங்கையில் நல்லிணக் கத்தையும் அமைதியையும் உருவாக்கும் நோக்குடனேயே போர்க் குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா. தீர்மானம் வலியுறுத்துவதால் கோபி அனானே அந்தக் குழுவின் தலை வராக இருப்பதற்குச் சிறந்தவர் என்று தற்போதைய மனிதவுரி மைகள் ஆணையாளர் நவிப் பிள்ளை ஆலோசிக்கிறார் என்று தகவல்கள் கூறுகின்றன.

"கோபி அனானைத் தலைவராக நியமிப்பதில் பல் அனுகூலங்கள் இருப்பதாக நவிப்பிள்ளை கருதுகிறார். அவரைப் போன்ற ஒருவரை இலங்கை அரசு வெகு சுலபமாகப் புறங்கூறி ஒதுக்கிவிட முடியாது.



அதே நேரத்தில் இலங்கைக்கு உள்ளே விசாரணைகளை நடத்த அனான் விரும்பினால் அதனை மறுப்பதும் இலங்கை அரசுக்கு தர்மசங்கடமானது. மீறி தடை விதிக்கப்பட்டால் அது சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிடும்"" என்று ஐ.நா. வட்டாரங்கள் கூறுகின்றன.

அண்மையில் சிரியாவில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில்கூட அனான், தீவிர ஈடுபாடு காட்டி நேர்மையுடன் செயற்பட்டிருந்தார். (2)

# புலம்பெயர் தமிழர்களின் சொத்துக்கள் முடக்கம்

## வர்த்தமானி அறிவித்தல் வெளியானது

(கொழும்பு)

தடை செய்யப்பட்ட புலம்பெயர் தமிழர்களின் சொத்துக்கள் முடக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தினால் 16 புலம் பெயர் தமிழ் அமைப்புக்களும், 424 தனிநபர்களுக்கும் இலங்கை அரசாங்கம் தடை விதித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையின் ஆயிரத்து 373 பிரகடனத்தின் அடிப்படையில் இந்த அமைப்புக்களும் தனிநபர்களும் தடை செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கையொப்பத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது,

குறித்த நிறுவனங்களின் மற்றும் தனிப்பட்ட நபர்களின் சொத்துக்கள் முடக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய வங்கி மற்றும் ஏனைய வங்கிகளுக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள சொத்துக்களை முடக்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2)

## அருணலு விருது வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் தரம் 5 இல் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான அருணலு விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளையில் நடைபெறவுள்ளதாக சிரேஷ்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532



வடமராட்சி கற்கோட்டை கிழக்கு கடற்றொழிலாளர்களை யாழ். மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். இதன்போது அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் பொருளாதார நெருக்கடிகள் மற்றும் வருமானங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியதைப் படத்தில் காணலாம்.

*(படம்:- கரவெட்டி செய்தியாளர்)*

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு 10 ஆயிரத்து 500 கோடி ரூபா இழப்பு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2012 ஆம் ஆண்டு முதல் இதுவரை 10 ஆயிரத்து 500 கோடி ரூபா இழப்பை சந்தித்துள்ளதாக அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனம் 2015 ஆம் ஆண்டு ஆயிரத்து 400 கோடி ரூபாவையும் 2016 ஆம் ஆண்டு ஆயிரத்து 600 கோடி ரூபாவையும் இலாபமாக பெற உத்தேசித்துள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 3 ஆயிரத்து 500 கோடி முதலீட்டையும் 24 ஆயிரம் கோடி கழி ஒதுக்கத்தையும் கொண்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் 2 ஆயிரத்து 574 ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். சில பதவிகளுக்கு மேலதிகமான ஊழியர்கள் இருப்பதுடன் சில பதவிகளுக்கு வெற்றிடங்களும் நிலவுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் குறுகிய கால கடன், வங்கி மேலதிக பற்று, மத்திய கால கடன், நீண்டகால என மொத்த கடன் 44 ஆயிரத்து 700 கோடி ரூபாவாகும் எனவும் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் விதமாக அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா இந்த ஆவணத்தை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். (2)

# இன்று ஒரு தகவல்

## வாதத்துக்கு மருந்து

ஒரு ஊரிலே பெரியவர் இருந்தார். அவர் பார்வையிழந்தவர். வாதாடுவதிலே சாலச் சிறந்தவர். தர்க்கத்திலே மேதை.

அவரிடம் சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர் சொன்னார்;

"சூரியன் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. சந்திரன் ஒளியைக் கொடுக்கிறது. விண்மீன்கள் மின்னி மின்னி பிரகாசிக்கிறது. வெளிச்சம் இருப்பதால்தான் நமக்கு எவ்வளவோ உபயோகமாக இருக்கிறது" என்றார்.

உடனே பார்வை இழந்த அந்தப் பெரியவர்; வெளிச்சம் என்ற ஒன்று உண்மையிலேயே இருக்கிறதா?" என்றார்.

"உண்மையிலேயே ஒளி இருக்கிறது!" என்றார்.

"நான் அதை நம்பமாட்டேன்" என்று கூறினார்.

"சூரியன்... சந்திரன்... நட்சத்திரம்... இவையெல்லாம் இருக்கிறதாகச் சொன்னார்கள்"

அதையெல்லாம் ஒப்புக் கொள்கிறேன். ஆனால்... அதையெல்லாம் என்னை சற்றுத் தொட்டுப் பார்க்க விடுங்கள்" என்றார்.

"அவற்றினை தொட்டு அறிய முடியாது" என்றார்.

"அப்படியென்றால்... முகர்ந்து அறிகிறேன். முகர்ந்து பார்க்க விடுங்கள்... ஏதாவது வாசனை வருகிறதா... என்று பார்க்கிறேன்" என்று சொன்னார்.

"அதுவும் முடியாது" என்றார்.

"சரி... அதுவும் முடியவில்லையென்றால், அந்த வெளிச்சத்திலே சிறிதளவு எடுத்து என் கையிலே கொடுங்கள். வாயிலே போட்டு விழுங்கி ருசித்துக் கொள்கிறேன்" என்றார்.

அவரை எந்த வகையிலேயும் ஒப்புக்கொள்ள வைக்க முடியவில்லை.

அவரைச் சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் குழப்பமடைந்தார்கள்.

"என்ன... நாங்கள் சொல்வதை நீங்கள் நம்பவில்லையா?" என்றார்.

என்னுடைய நான்கு புலன்களுக்கும் புலப்படாத ஒன்றை நான் "மாயை" என்கிறேன். நீங்கள் என்னை அவமானப் படுத்துவதற்காக இப்படிச் சொல்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

ஏதோ உங்களுக்கெல்லாம் "பார்வை" இருப்பதாகவும்... அது எனக்கு இல்லை என்று சொல்லி நீங்கள் அவமதிக்கிறீர்கள்" அப்படியென்றார் தர்க்க சாஸ்திரத்திலே மேதையான அந்தப் பெரியவர்.

சுற்றியிருந்தவர்கள் பார்த்தார்கள்... "வெளிச்சம் இருக்கிறதை இவர் நம்ப வேண்டும்... இவரை நம்ப வைக்க வேண்டுமென்றால்... அது புத்தராலேதான் முடியும்" என்று கூறினார்கள்.

"சரி அவரிடம் போவோம்" என்று எல்லோரும் முடிவெடுத்து போய்ச் சேர்ந்தார்கள்.

புத்தரிடம் விபரத்தை எடுத்துரைத்தார்கள்.

புத்தர் சிரித்தார். உண்மை எப்படிப்பட்டது என்று நான் நினைக்கிறேனோ அப்படித்தான் அவரும் நினைக்கிறார். எதையும் அனுபவபூர்வமாக உணர்ந்தால்தான் நம்பமுடியும்.

"ஒளியை அனுபவித்து அறியாத வரையில் அது இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லை. அதனாலே இவர் அதை நம்பாததும் சரிதான்" என்று கூறினார்.

அதன்பின் சொன்னார்; "உங்களைக் குணப்படுத்தி விடலாம்... உங்களுக்குத் தேவை ஞானி அல்ல... மருத்துவர்தான்" என்றார்.

ஒரு வைத்தியரிடம் அழைத்துக்கொண்டு சென்றார்கள். பார்வை கிடைக்கப் பெற்றது... வெளிச்சத்தைக் கண்டதும் அவர் மகிழ்ச்சி அடைந்தார். புத்தரை வணங்கினார்.

"நான் வாதம் செய்தேன்... நீங்கள் எதிர்வாதம் செய்யவில்லை. என்னுடைய பிரச்சினை மருத்துவரால்தான் தீரும் என்று சொல்லி எனக்குப் பார்வை கிடைக்கச் செய்தீர்கள்" என்றார்.

மனித குலத்தின் மிகப் பெரும்பாலானவர்கள் நிலைமை இதுதான் அப்படியென்கிறார் ஓஷோ!

இந்தக் காலத்திலே சில பேர் கண்களைத் திறந்து கொண்டு சில காரியங்கள் செய்வார்கள். அது பிழையென்பது அவர்களுக்குப் பின்புதான் புரியும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாலியாவில் கார்க்குண்டு தாக்குதல்; 18 பேர் மரணம்



சோமாலிய பாராளுமன்றத்தில் ஷெபாப் தீவிரவாதிகளின் தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் தலைநகர் மொகாடிசுவில் உள்ள பாராளுமன்றத்தில் புகுந்து அதிரடி தாக்குதல் நடத்தினார்கள். முன்னதாக பாராளுமன்ற கட்டடத்தின் வாசலில் கார் குண்டை வெடிக்க செய்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரின் கவனத்தை திசை திருப்பினர்.

அதற்குள் தற்கொலை படை தீவிரவாதிகள் மற்றும் துப்பாக்கி ஏந்திய நபர்கள் என பலர் பாராளுமன்ற கட்டடத்திற்குள் புகுந்தனர். அப்போது அங்கு கூட்டம் நடந்து கொண்டிருநததால். எம்.பிக்கள் பலர் இருந்தனர். இதனால் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. இதற்கிடையே தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்பு படை மற்றும் ஆபிரிக்க யூனியன் படையினருக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடந்தது.

இச்சண்டை சுமார் 4 மணி நேரத் துக்கும் மேலாக நடந்தது. இறுதியில் இத்தாக்குதலில் 18 பேர் பலியாகினர். அவர்களில் 8 தீவிரவாதிகளும், 4 பாதுகாப்பு படை வீரர்களும் அடங்கு வர். ஆனால் எம்.பிக்கள் அனைவரும் உயிர் தப்பினர். அவர்கள் அனைவரும் பாதுகாப்புடன் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2)




நரேந்திர மோடி பிரதமராக இன்று பதவியேற்கிறார். அவரை வாழ்த்தும் விதமக பேப்பர் டீ கப்கள் மூலம் மோடியின் உருவத்தை வாலிபர் ஒருவர் உருவாக்கி பார்வைக்காக வைத்திருந்ததை படத்தில் காணலாம்.

## நில நடுக்கத்தால் 266 பேர் காயம்

கிரேக்கம் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளில் இடம்பெற்ற நில நடுக்கத்தால் 266 பேர் காயம டைந்தனர்.

கிரேக்கத் தீவான சமோத்ராகியின் தென்மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் பகல் 12.25 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் கட்டடங்கள் குலுங்கின. ரிக்டர் அளவில் அதன் அதிர்வு 6.3 புள்ளிகளாகப் பதிவானபோதிலும், உயிர்ச்சேதமோ பொருட்சேதமோ ஏற்படவில்லை.

இந்நிலையில், துருக்கி நாட்டின் மேற்குப் பகுதியில் இடம்பெற்ற நில நடுக்கம் காரணமாக 266 பேர் காயமடைந்தனர். அவர்களில் பல்ரும் நிலநடுக்கம் ஏற்பட்டதும் கட்டடங்களில் இருந்து பீதியுடன் அவசரமாக வெளியேறிய போது தான் காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

காயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சீனாவின் யுன்னான் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட 5.6 ரிக்டர் அளவிலான மிதமான நிலநடுக்கத்தால் 5 பேர் காயமடைந்தனர். (2)

# தாய்லாந்து இராணுவ புரட்சியை எதிர்த்து மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்

**(பாங்கொக்) தாய்லாந்தின் நாடாளுமன்ற மேலவை கலைக்கப்பட்டதாக அந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றியுள்ள இராணுவம் அறிவித்துள்ளது. இதனையடுத்து தாய்லாந்தில் இராணுவ ஆட்சியாளர்களின் அதிகாரம் ஓங்கியுள்ளது. இந்நிலையில் தாய்லாந்து நாட்டின் பல்வேறு நகரங்களில் இராணுவ புரட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

குறிப்பாக தலைநகர் பாங் கொக்கில் ஆயிரக்கணக்கானவர்கள் நேற்றைய தினம் வீதிகளில் திரண்டு இராணுவ ஆட்சிக்கு எதிராக கோஷமிட்டனர்.

இதனால் கூடுதல் இராணுவப் படைகள் அங்கு வரவழைககப்பட்டன. அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை விரட்டியடித்தனர்.

இதேவேளை அந்நாட்டு அரசு தொலைக்காட்சியில் தேசிய அமைதி மற்றும் ஒழுங்கு நிலை நாட்டுக் குழுவின் செய்தித் தொடர்பாளர் கர்னல் வின்தாய் சுவாரி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,




நாடாளுமன்ற மேலவை (செனட்) கலைக்கப்படுகிறது. நாடாளுமன்ற தேசியப் பேரவை (கீழவை) அல்லது மேலவைக்கு பதிலாக இனி இராணுவ ஆட்சிக் குழுவே சட்டங்களை இயற்றும் அதிகாரத்தை வகிக்கும் என்று வின்தாய் சுவாரி கூறினார்.

150 உறுப்பினர்கள் கொண்ட மேலவை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு எதுவுமே இராணுவ ஆட்சியாளர்களின் பிடியிலிருந்து தப்பவில்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

யிங்லக்குக்கு தடுப்புக் காவல்: முன்னதாக, தாய்லாந்து முன்னாள் பிரதமர் யிங்லக் ஷினவத்ரா மற்றும் அவரது அரசின் முக்கியத் தலைவர்கள் ஒரு வாரம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கர்னல் வின்தாய் சுவாரி கூறுகையில், தாய்லாந்து அரசியல் பிரச்சினைகளில் அவர்களுக்கு உள்ள நேரடித் தொடர்பு அடிப்படையில் அவர்கள் ஒருவாரம் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளனர் என்றார். (2)

# ஜனநாயகத்தின் வலிமையை காட்டவே சார்க் தலைவர்களுக்கு அழைப்பு



(புதுடில்லி)

“நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்கும்படி, “சார்க்” நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தது, இந்திய ஜனநாயகத்தின் வலிமையை காட்டவே. இருதரப்பு பிரச்சினைகள் அடிப்படையில், அதை உருவகப் படுத்தி பார்க்கக் கூடாது என, பா.ஜ., மூத்த தலைவர், அருண் ஜெட்லி கூறியுள்ளார்.

தெற்கு ஆசிய பிராந்திய ஒத்துழைப்பு சங்கமான - சார்க் அமைப்பில், இந்தியா தவிர, பாகிஸ்தான், பூடான், இலங்கை, மாலைதீவு, வங்கதேசம், நேபாளம் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் உறுப்பினர்களாகவுள்ளன.

நரேந்திர மோடி தலைமையிலான, புதிய அரசின் பதவியேற்பு விழாவில் பங்கேற்கும்படி, இந்த நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது. ஆனால், பாக்., பிரதமர் நவாஸ் ஷெரீப்பிற்கும் அழைப்பு விடுத்ததற்கு, காங்கிரசும், இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்ததற்கு, தமிழக அரசியல் கட்சிகள் சிலவும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இந்நிலையில், பா.ஜ., மூத்த தலைவர் அருண் ஜெட்லி கூறியதாவது, இந்திய ஜனநாயகத்தின் வலிமையைக் காட்டவே, சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மோடி தலைமையிலான அரசு பதவியேற்பது, ஜனநாயக ரீதியான நிகழ்ச்சி. இதை சார்க் நாடுகளுக்கு இடையே யான இரு தரப்பு பிரச்சினைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. ஆசிய பிராந்தியத்தின் ஒத்துழைப்பிலும், ஜனநாயகத்தின் மீதும், இந்தியா கொண்டுள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துவது, மோடி பதவியேற்பு நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியில, இந்தியாவின் அண்டை நாடுகளின் தலைவர்கள் பங்கேற்பது அவசியம்.

இந்தியா மிகப்பெரிய ஜனநாயக நாடு. இந்திய ஜனநாயக நாட்டில் நடந்த பொதுத தேர்தல், மிகப்பெரிய கொண்டாட்டம். நியாயமாகவும், அமைதியாகவும் நடந்த இநதத் தேர்தலில், ஜனநாயக முறையில் அதிகார மாற்றம் நிகழ்வது பெருமை தரும் விடயம். மோடியும், அவரின் தலைமையிலான அமைச்சரவையும் பதவியேற்பதன் மூலம் ஜனநாயக ரீதியான கொண்டாட்டங்கள் முடிவுக்கு வரும். இவ்வாறு, அருண் ஜெட்லி கூறினார். (2)

## பதவியேற்பு விழாவில் டீக்கடைக்காரன்

நரேந்திர மோடி வேட்புமனு தாக்கல் செய்தபோது, அவரது வேட்பு மனுவினை முன்மொழிந்த டீக்கடைக்காரருக்கு பதவியேற்பு விழாவுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது.

நரேந்திர மோடி, அண்மையில் நடந்துமுடிந்த நாடாளுமன்ற தேர்தலில் குஜராத் மாநிலத்தில் உள்ள வதோதரா மற்றும் உத்தர பிரதேசத்திலுள்ள வாரணாசி ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிட்டார்.

இதில் வதோதரா தொகுதியில் மோடி வேட்புமனு தாக்கல் செய்தபோது, அவரது மனுவினை முன்மொழிந்து வதோதராவில் டீக்கடை நடத்தி வரும் கிரண் மஹிடா என்பவர் கையொப்பமிட்டார்.

இந்நிலையில் தேர்தலில் வெற்றிபெற்று நாட்டின் பதினான்காவது பிரதமராக பதவியேற்கவுள்ள மோடி, இந்த பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ள வரும்படி, கிரண் மஹிடாவுக்கு அழைப்பிதழ் அனுப்பியுள்ளார். இது தொடர்பாக மகிழ்ச்சி தெரிவித்துள்ள அந்த டீக்கடைக்காரர் பதவியேற்பு விழாவில் பங்கேற்பேன் என்று தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியுடன் இணைந்து செயற்பட விருப்பம்

## ரஷ்ய ஜனாதிபதி தெரிவிப்பு



‘இந்தியாவின் புதிய பிரதமராக பதவியேற்கும் நரேந்திர மோடியுடன இணைந்து செயற்படுவதை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளேன்’ என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செயின்ட் பீட்டர்ஸ் பர்க நகரில் செய்தியாளர்களிடம் புடின் நேற்று முன்தினம் கூறியதாவது, இந்தியா - ரஷ்யா இடையிலான உறவு, அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டது. இந் திய மக்களுடன் நாங்கள் நட்புறவுடன் உள்ளோம்.

மோடியை நான் சந்தித்துள்ளேன். அவருடன் நான் நெருங்கி பணியாற்ற உள்ளேன். இந்தியா தலைசிறந்த நாகரிகம் கொண்ட நாடாகும். மக்களவைத் தேர்தலை வெற்றிகரமாக இந்தியா நடத்தி முடித்துள்ளது. இதற்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவுடன் பொருளாதார உறவு, மனிதநேயத் தொடர்புகள், இராணுவ மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை ரஷ்யா எடுக்க உள்ளது.


உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை இந்தியா கடைப்பிடித்தது. இதற்காக இந்தியாவுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் 10 ஆண்டுகளாக இருந்த ஐ.மு.கூட்டணி அரசை தூக்கி எறிந்து விட்டு புதிய அரசை மக்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளாக இருந்த ஐ.மு.கூட்டணி அரசுடன் ரஷ்யா கொண்டிருந்த நட்பும் தற்போது மோடி தலைமையிலான அரசுடன் உள்ள நட்பு குறித்து பேசுகையில், இந்தியா -ரஷ்யா உறவு அரசியலுக்கு அப்பாற்பட்ட உறவு. இந்தியா சிறந்த நாகரிகத்தை கொண்டது என்பது அவர்களின் ஜனநாயக தேர்தலை வெற்றியுடன் நடத்தியுள்ளது பாராட்டுக்குரியது என்றார். இந்தியாவுடன் பொருளாதார உறவு, மனிதநேயத் தொடர்புகள், இராணுவ மற்றும் தொழில் நுட்ப ஒத்துழைப்பை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை ரஷ்யா எடுத்து வருகிறது. அனைத்தையும் நிறைவேற்ற தயாராகி வருகிறோம் என்றார் புடின். (2)

# சீனாவின் அத்துமீறலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## வியட்நாம் பிரதமர் தெரிவிப்பு



வியட்நாம் நாட்டின் கடல் பகுதியில் அத்துமீறலில் ஈடுபட்டு, அங்கு எண்ணெய் துரப்பண பணிகளில் ஈடுபடும் சீனாவை கண்டித்தும், அந்த நடவடிக்கையை தடை செய்ய வலியுறுத்தியும், சட்டப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வியட்நாம் பிரதமர், நிகுயென் டான் டங் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் அயல் நாடுகளில் ஒன்றான சீனா 12இற்கும் மேற்பட்ட நாடுகளுடன் எல்லைகளைக் கொண்டுள்ளது.

அதனால், இந்தியா உட்பட பல நாடுகளுடன் எல்லை பிரச்சினை சீனாவுக்கு உள்ளது. அந்த வகையில், வியட்நாம் நாட்டின் கடல் பகுதியில் உள்ள சில தீவுகள் மற்றும் கடல் பகுதிகளை தனக்கு சொந்தமானது என தெரிவிக்கும் சீனா, அங்கு தன் படைகளை நிறுத்தி உள்ளது. மேலும், எண்ணெய் வளம் மிக்க ஒரு தீவில் எண்ணெய் துரப்பண பணிகளையும் சீனா மேற்கொள்கிறது. இதனால், இருநாடுகளுக்கும் இடையே பதற்றம் ஏற்பட்டு உள்ளது. வியட்நாமில் தொழில்களை மேற்கொண்டு வந்த 4ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அங்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதால் அவர்கள் கடந்த வாரம் சீனாவுக்கு பத்திரமாக அப்புறப்படுத்தப்பட்டனர்.

இந் நிலையில், பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள வியட்நாம் பிரதமர் நிகுயென் டான்டங் இதுகுறித்து கூறியதாவது,

வியட்நாம் கடல் பகுதியில் சீனாவின் அத்துமீறல் பிரச்சினையை அமைதியான முறையில் தீர்க்க நாங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். எந்த காரணத்தை கொண்டும் போர் தாக்குதல் போன்ற செயல்களில் ஈடுபடமாட்டோம்.

கடந்த காலத்தில் நடந்த போர்களின் வடுக்கள் இன்னும் மறையாத நிலையில் அடுத்த போருக்கு நாங்கள் தயாராக இல்லை.

சீனாவின் அத்துமீறலை நாங்கள் சர்வதேச நீதிமன்றத்தின் விசாரணைக்கு கொண்டு செல்வோம் பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண்போம். இவ்வாறு அவர் கூறினார். (2)

## வெளிச்செல்லும் வெளிநாட்டு செலாவணி கட்டுப்படுத்த புதிய திட்டம் முன்னெடுப்பு

நாட்டில் இருந்து வெளிநாட்டு செலவாணி வெளிச் செல்வதை குறைப்பதற்காக இலங்கையின் தேசிய காசோலை விடுவிப்பு மையமும் புதிய திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளது.

இதன்படி விசா மற்றும் மாஸ்டர் காட், எமெக்ஸ் காட் ஆகியவற்றுக்கு பதிலாக உள்ளூர் இலத்திரனியல் அட்டைகளை அறிமுகப்படுத்தப் படவுள்ளன.

தற்போது இலத்திரனியல் அட்டை கொடுப்பனவு முறைகளில் 95 வீதமானவை உள்ளூர் கொடுப்பனவுகளாக மேற்கொள்ளப்படுகின்றன. 5 வீதமே சர்வதேச கொடுப்பனவுகளாகவுள்ளன.

மத்திய வங்கியின் அறிக்கையின்படி 9 இலட்சத்து 26 ஆயிரத்து 949 கடன்அட்டை பாவனையாளர்களில் 8 இலட்சத்து 90 ஆயிரத்து 200 அட்டைகள் உள்ளூர் மற்றும் சர்வதேச அட்டைகளாக உள்ளன.

இதில் 36ஆயிரத்து 749 உள்ளூர் அட்டைகள் மூலம் மாத்திரம் 21.6 மில்லியன் பரிமாற்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இது 121 பில்லியன் ரூபாய்கள் பெறுமதியான பரிமாற்றமாகும்.

எனினும் இவற்றில் பெரும்பாலான பரிமாற்றங்கள் வெளிநாட்டு செலவாணியாக மேற்கொள்ளப்படுவதால் நாட்டில் இருந்து நிதி வெளியேற்றம் இடம்பெறுகிறது. எனவே இதனையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தேசிய காசோலை விடுவிப்புமையம் குறிப்பிட்டுள்ளது. (2)

## மாலி அரசுக்கும் கிளர்ச்சி குழுக்களுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்து

(பமாகோ)

மாலி அரசுக்கும் 3 கிளர்ச்சியாளர் குழுக்களுக்கும் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் தலைநகர் பமாகோவில் கையெழுத்தானது.

ஆபிரிக்க நாடான மாலியின் வடக்கு பாலைவனப் பகுதியை 'ஆஸாவாத்' என்று கிளர்ச்சியாளர்கள் அழைத்து வருகின்றனர்.

இங்குள்ள கிடால் நகரானது கிளர்ச்சியாளர்களின் மையமாக விளங்குகிறது.

இந்தப் பகுதிக்கு சுதந்திரம் வழங்கக்கோரி கடந்த 1960ஆம் ஆண்டு முதல் பல்வேறு போராட்டங்களில் கிளர்ச்சியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னதாக, கிடால் நகரில் கடந்த புதன்கிழமை பாதுகாப்புப் படையினர் மீது துவாரெக் மற்றும் அரபுக் கிளர்ச்சியாளர் குழுவினர் நடத்திய தாக்குதலில் 20 பாதுகாப்புப் படை வீரர்கள் கொல்லப்பட்டனர். 30 பேர் காயமடைந்தனர்.

இதையடுத்து கிளர்ச்சியாளர்களை சுற்றி வளைத்த இராணுவம் அவர்களைக் கைது செய்தது. இதைத் தொடர்ந்து அமைதிப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

அமைதிப் பேச்சுவார்த்தையில் கிளர்ச்சியாளர்கள் மற்றும் மாலி ஜனாதிபதிக்கு இடையே இடைத்தரகராக ஆபிரிக்க ஒன்றியத்தின் தலைவர் முகமது ஒல்ட் அப்தெல் அஜீஸ் செயற்பட்டார்.

இந்த ஒப்பந்தத்தில் ஆஸாவாத் தேசிய விடுதலை இயக்கம் ஆஸாவாத் ஒற்றுமை உயர் ஆணைக்குழு மற்றும் ஆஸாவாத் அரபு இயக்கம் ஆகியவை கையெழுத்திட்டன. (2)

## தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண இலங்கை அரசு முயற்சிக்கவில்லை கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டு

இலங்கையில் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து 5 ஆண்டுகள் கடந்த பின்பும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் எந்த நடவடிக்கையையும் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் ஜி.இராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இந் நிலையில் இந்திய அரசு தன்னுடைய இராச்சிய உறவுகள் மற்றும் அழுத்தங்களின் மூலமாகவும், பேச்சுவார்த்தையின் மூலமாகவும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

புதிய அரசின் பதவியேற்பு நிகழ்ச்சிக்கு இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ வருவதை பயன்படுத்தி, கூடுதல் நிர்ப்பந்தம் கொடுத்து மத்திய அரசு இலங்கை தமிழர் பிரச்சினைகளுக்கும், இன்னல்களுக்கும் தீர்வுகாண வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்மாநில செயற்குழு மத்திய அரசை வலியுறுத்துகிறது என கூறியுள்ளார். (2)

## மோடியின் பதவியேற்பில் மஹிந்தவா? கர்நாடக தமிழ் மக்கள் போராட்டம்

பிரதமர் பதவியேற்பு விழாவில் பங்கேற்க இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதற்கு கர்நாடக தமிழ் மக்கள் இயக்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த இயக்கத்தின் தலைவர் சி.இராசன் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போரில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந் நிலையில், டில்லியில் இன்று பிரதமராக மோடி பதவியேற்கும் விழாவில் பங்கேற்க இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது. இதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இலங்கை ஜனாதிபதியின் இந்திய வருகையைக் கண்டித்து பெங்களூர் டவுன் ஹால் எதிரே நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் தமிழர்கள், தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் திரளாகப் பங்கேற்க வேண்டும் என அதில் குறிப்பிட்டுள்ளார். (2)

## புகைத்தலொழித்தல் கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

புகைத்தல் ஒழித்தல் தினம் எதிர் வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு கலந்துரை யாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி. அ.சாந்தசீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அடிக் நிறுவன வளவாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் சமுர்த்தி வாழ் வெழுச்சி அபிவிருத்தி உறுப்பினர்கள், சமுர்த்தி மகா சங்க உறுப்பினர்கள், சமுர்த்தி வங்கிகட்டுப்பாட்டு சபை உறுப்பினர்கள், மதகுருமார் மற்றும் தென்மராட்சி பாடசாலை அதிபர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளதாக தென்மராட்சி திவிநெகும மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் க.விக்கி னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.(2-29)

## பிரிவுத்துயர் பகிர்வு



### சின்னத்தம்பி சாந்தகுமார்

அந்திரான் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் France Sevran ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சாந்தகுமார் கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 9.30 மணிக்கு 'LE FUNERARIUM '83,Boulevard Robert Ballanger, 93420 Villepinte என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### நாகலிங்கம் கதிரவேலு

யாழ்.அனலைதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கதிரவேலு கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு Ogden Funeral Homes,4164 Sheppard Avenue East,Scarborough,ON M1S 1T3,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### வடிவேலு வைகுந்தவாசன்

யாழ்.கட்டுடையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Bonn ஐவசிப் பிடமாகவும் கொண்ட வடிவேலு வைகுந்தவாசன் கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளைமறுதினம் புதன்கிழமைபிற்பகல் 2 மணிக்கு BahnhofstraBe 77,53123 Bonn,Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



### வேலுப்பிள்ளை கண்ணன்

யாழ்.பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் இந்தியா (பாண்டிச்சேரியை) வசிப்பிடமாகவும்கொண்ட வேலுப்பிள்ளை கண்ணன் நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளைமறுதினம் புதன்கிழமை இந்தியாவில் உள்ள பாண்டிச்சேரியில் நடைபெறும்.




### ஜசிந்தா சவரிமுத்து

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜசிந்தா சவரிமுத்து கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று மாலை 3 மணிக்கு அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமலினால் சிபாரிசு செய்யப்பட்ட வீதி வேலைகள் முற்றுப்பெறவில்லை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டு சுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறை ப்பற்று ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சுமார் 26 வீதி களை புனரமைப்பு செய்வதாக நாமல் ராஜபக்ஷவினால் உறுதியளிக்கப் பட்ட நிலையில், ஆதிபராசக்தி வீதி மாத்திரம் புனரமைக்கப்படாமல் விடு பட்டதற்கான காரணம் என்னவென மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம் செய்யப் பட்டபின்னர், கடந்த 2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி நாமல் ராஜபக்ஷவினால் மேற்குறித்த பிர தேச செயலர் பிரிவுகளிலுள்ள சுமார் 26 வீதிகள் கொங்கிறீட் காப்பெற் வீதிகளாக புனரமைக்கப்படுமென உத்தியோக பூர்வமாக தெரிவித்து ஆரம்பகட்ட வேலைகளை ஆரம் பித்து வைத்தார்.

இவரினால் வேலைகள் ஆரம் பித்து வைக்கப்பட்ட வீதிகள் ஒட்டு சுட்டான், கரைதுறைப்பற்று, புதுக் குடியிருப்பு ஆகிய பிரதேச சபைக ளுக்குரியவை ஆகும்.

குறித்த இவ் வீதிகள் அனைத் தும் புனரமைக்கப்பட்டுள்ள போதிலும் ஆதிபராசக்தி வீதி மாத்திரம் புனர மைக்கப்படவில்லை.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் காதலியார் சம்மளங்குளம் கிராம சேவகர் பிரிவின் கீழுள்ள சிவ நகர் கிராமத்திற்கு செல்கின்ற பிரதான வீதியே ஆதிபராசக்தி வீதியாகும்.

இவ்வீதியின் இருமருங்கிலும் 30 இற்கு மேற்பட்ட குடும்பங்களும் சிவநகர் கிராமத்தில் 100இற்கும் மேற் பட்ட குடும்பங்களும் வாழ்ந்து வரு கின்றன.

நாமல் ராஜபக்ஷவினால் புனர மைப்பிற்காக குறிக்கப்பட்ட வீதிகளில் ஆதிபராசக்தி வீதி மட்டுமே 11/2 கிலோ மீற்றர் நீளமுடைய குறுகிய தூரத் தைக் கொண்டதாக உள்ளது.

இவ்வேலைத்திட்டமானது வட க்கின் வசந்தம் திட்டத்தினூடாக நாமல் ராஜபக்ஷவினால் பிரகடனப்படுத் தப்பட்டு குறித்த வீதிகள் புனரமைப்பு வேலையை துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சினூடாக வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்றுக் கொண்டது.

இந்நிலையில் வேலைகளை பூர் த்திசெய்யாமல் அரைகுறையாக விடப்பட்டிருப்பதையிட்டு மக்கள்விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பல தடவைகள் முல்லை.மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட நாமல் ராஜபக்ஷவுக்கு தெரியப்படுத்தியும் எவ்வித மாற் றமும் இடம்பெறவில்லை.

எனவே புனரமைப்பதாக உறுதி யளித்த குறித்த வீதியை செப்பனிடுமாறு மக்கள்வலியுறுத்தியுள்ளனர். (9-267)

## இயக்குநர் சபை தெரிவு

(பூநகரி)

பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக் குநர் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் எதிர் வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பூநகரி பிரதேச செயலக மண்டபத்தில் தலைவர் வி.கந்தசாமி தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் 17 கிளைகளைச்சேர் ந்த 58 பொதுச்சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு இயக்குநர் சபையை தெரிவு செய்துள்ளனர். (9-84)

## நிர்வாகிகள் தெரிவு

(பூநகரி)

வவுனியா மாவட்ட அரச சேவை நம்பிக்கை நிதியத்தின் புதிய நிர் வாகத் தெரிவு நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இதன்படி, தலைவர் எஸ்.சுப்பிர மணியம், உப தலைவர் அ.யஸ்ரின், செயலாளர் க.அற்புதராசா, உப செய லாளர் ஆர்.கணேசமூர்த்தி, பொரு ளாளர் வி.இராமச்சந்திரன் ஆகியோ ருடன் இரு செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (9-84)

## சிறு குளங்களின் கீழ் உப உணவு செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் உப உணவுச் செய்கை மேற் கொள்ளப்பட்டு வருவதாக ஒலுமடு விவசாய போதனாசிரியர் அ.கபிலன் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டிற்கான சிறுபோகச் செய்கையில் விவசாயிகள் அதிக விளைச்சலை பெற்றுக்கொள்ள ஏது வாக முல்லைத்தீவு விவசாய திணை க்கள விரிவாக்கற் பிரிவினரால் உப உணவு பயிரிடும் திட்டம் முன்னெடுக் கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒலுமடு விவசாயப் போதனாசிரியர் பிரிவின் கீழுள்ள ஒலுமடுக்குளத்தில் 45 ஏக்கர், தச் சடம்பன் குளத்தில் 45 ஏக்கர் அம்ப காமம் குளத்தில் 25 ஏக்கர் வரை யில் நிலக்கடலை, பயறு, எள் ஆகிய பயிர்கள்செய்கைபண்ணப்பட்டுள்ளன.

இவை தற்போது 1 1/2 மாதப் பயிர்களாக வயல்களில் காணப்படு கின்றன.

இவற்றுடன் முல்லை.மாவட்ட ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை யாளர் சங்கத்தின் கௌபி விதை உற் பத்தியும் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய வரட்சியான கால நிலையை எதிர்கொள்ளும் முகமாக விவசாயிகள் குளத்து நீரை வினை த்திறனாக பயன்படுத்தி வருகின் றனர்.

அத்தோடு தொடர்ந்து வரும் காலங்களில் சிறுபோகச்செய்கையின் போது உப உணவுச் செய்கையை முன்னெடுக்க விவசாயிகள் ஆர்வம் காட்டியுள்ளதாகவும் அவர் தெரி வித்தார். (9-267)




## அத்தியாவசிய தேவைகளின்றி மாந்தை கிழக்கு கிராமம்

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 2 ஆயிரத்து 721 குடும் பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 953 பேர் மீள்குடியேற்றப்பட்டு 5 வரு டங்களாகியும் அடிப்படை வசதிகளி ன்றி வாழ்வதாக விசனம் தெரிவித் துள்ளனர்.

இம்மக்கள் மருத்துவம், போக்கு வரத்து, குடிநீர், வீடு போன்ற வச திகள் உட்பட வேலைவாய்ப்புக்கள், அபிவிருத்தி போன்றவற்றிலும் பின் தங்கிய நிலையிலே காணப்படுகின் றனர்.

இந்நிலையில், 20 கிராம சேவை யாளர் பிரிவுகளுக்கும் செல்கின்ற பிரதான வீதியான வன்னேரிக் குளம் முதல் பாண்டியன்குளம் வரையான வீதி 18 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமையினால் மோச மாக சேதமடைந்துள்ளது.

இதனால் போக்குவரத்து சிக்கல் களும் நிலவுகின்றன.

அத்தோடு, இக்கிராமத்தின் பிர தான வைத்தியசாலையான நெட்டாங் கண்டல் வைத்தியசாலைக்கு நிரந் தர வைத்தியர்இன்மையால் நோயா ளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பொன்னகர், பூவரசங்குளம், கரும் புள்ளியான் போன்ற கிராமங்களில் வரட்சி நிலவுவதனால் குடிநீர்த் தேவை ஏற்பட்டுள்ளது.

வீட்டுத்திட்டத்தை பொறுத்தமட்டில் இன்னும் 850 குடும்பங்களுக்கு மேற்பட்டோருக்கு வீடுகள் தேவை யாகவுள்ளன.


எனவே அரச மற்றும் அரச சார் பற்ற நிறுவனங்கள் இக்கிராமத்தின் அடிப்படைத் தேவைகளை நிறை வேற்ற வேண்டுமென கிராம மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (9-15)

## செம்மலை பொதுச் சந்தையில் நிலவும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்து தருக

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச சபை யின் கீழுள்ள செம்மலை பொதுச் சந்தையில் நிலவும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யுமாறு சந்தை வியா பாரிகள் வேண்டுகோள் விடுத்துள் ளனர்.

இப்பொதுச்சந்தை வடக்கின் வச ந்தம் துரித மீட்சி திட்டத்தின் கீழ் சுமார் 17 இலட்சம் ரூபா செலவில் கட ந்த 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி மூன்று புதிய கட்டடங் களுடன் அமைக்கப்பட்டு அமைச்சர் றிசாட் பதியுதீனால் திறந்து வைக்கப் பட்டது.



செம்மலை, செம்மலை கிழக்கு, கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட சுமார் 450 இற்கும் மேற்பட்ட மக் களின் பயன்பாட்டிலுள்ள இச் சந்தை யில் பல்வேறு குறைபாடுகள் நிலவு கின்றன.

இதன்படி சந்தையின் 1 கிலோ மீற்றர் தூரத்திற்குட்பட்ட பகுதிகளில் நடமாடும் வியாபாரிகள் மீன், மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர்.

அத்தோடு சந்தையின் ஏனைய கடைகளிலும் மரக்கறி உட்பட ஏனைய வேறு பொருட்களும் விற்பனை செய் யப்பட்டு வருகின்றன.

இதனால் சந்தையிலுள்ள மரக்கறி, மீன் வியாபாரிகள் நட்டம் அடை வதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு கரைதுறைப்பற்று பிரதேச சபையி னர் நடமாடும் வியாபாரிகளையும் ஏனைய கடைகளில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுவதையும் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுவ துடன் சந்தையில் தளபாட வசதிகள், மின்சாரம், களஞ்சியசாலை, வாகன தரிப்பிடம் கடைத்தொகுதிகள், பெயர் ப்பலகை, கடைகளுக்கான அடைப்புக்கள் போன்றவற்றுடன் சந்தைக்கட்டட கூரை அமைப்பு சீர்படுத்தல், பழக்கடை, இறைச்சிக்கடை போன்ற வசதிகளை யும் மேற்கொள்ள வேண்டும்.

கழிவுகளை போடுவதற்கான இடங்கள் ஒதுக்கப்படாததோடு கழி வகற்றலும் சீராக இடம்பெறுவதில்லை.

மேற்குறித்த குறைபாடுகளை கரை துறைப்பற்று பிரதேச சபையினர் நிவர்த்தி செய்து சீரான வியாபா த்திற்கு வழி கோலுமாறு சந்ை வியாபாரிகள் வேண்டுகோள் விடு துள்ளனர். (9-26



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் முள்ளியவளை பாரதிமகளிர் இல்லத்திற்கு மூன்று துவிச்சக்கரவண்டிகள் நேற்று முன் தினம் வழங்கி வைக்கப்பட்ட வேளை...

## ஆசிரியர் விடுத் அமைக்குக

(முல்லைத்தீவு)

கொக்கிளாய் அ.த.க. பாடசாலை யில் ஆண் ஆசிரியர்களுக்கா விடுதியை அமைக்குமாறு கோ க்கை விடப்பட்டுள்ளது.

இப்பாடசாலை மீள்குடியேற்றத் தின் பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி முதல் இயங்கி வருகின்றது.

இந் நிலையில் கல்வி நடவடிக் கைகளுக்காக வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மூன்று ஆண் ஆசிரியர்கள் வருகை தருகின்றனர்.

எனினும், விடுதி வசதிகளின்மை யால் இவர்கள் மாதாந்தம் 5 ஆயி ரம் ரூபா வாடகை செலுத்தி தனியார் வீடுகளிலேயே தங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மாணவர்களின் கல்வி நட வடிக்கைகளை ஒழுங்காக மேற் கொள்ள ஏதுவாக இவ் ஆசிரியர்களுக்கு ஆசிரியர்களுக்கான ஆண்கள் விடுதி அமைத்துக்கொடுக்கவேண்டும்.

இப்பாடசாலையில் கற்பிக்கும் பெண் ஆசிரியர்களுக்கு விடுதி அமை த்துக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (9-267)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வாய்ப்பு ஒருவரை பலமுறை தாண்டிச் சென்று விட்டாலும் நல்வாய்ப்பு ஒரு நாள் அவரைக் கண்டு பிடித்தே தீரும் ~ ஸெனேகா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மோடியின் பதவியேற்பு நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வரும் பங்கேற்பு

(கொழும்பு)

இந்தியாவின் 15ஆவது பிரதமராகப் பதவியேற்கவுள்ள நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவும் பங்கேற்கிறார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வந்த அழைப்பினை ஏற்று, தான் இந்த விஜயத்தில் பங்கேற்கவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, ஜனாதிபதியின் இந்த இந்திய விஜயத்தில் அமைச்சர் ஆறுமுகம தொண்டமானும் பங்கேற்கவுள்ளார் என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் அறிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமராக, நரேந்திர மோடி இன்று மாலை பதவியேற்க வுள்ளார். இந்த நிகழ்வுக்கு சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், இலங்கை சார்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கவுள்ளார்.

இதற்காக நேற்று மாலை, ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் இந்தியா பயணமானார்கள.

இந்த இந்திய விஜயத்தில் பங்கேற்குமாறு வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு, வெளிவிவகார அமைச்சரினூடாக ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்த போதிலும் அந்த அழைப்பை முதலமைச்சர் விக்னேஸவரன் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## கண்ணனிடம் உதவி கேட்டு துரியோதனனே முதலில் சென்றான்

பாரதப் போர் நடப்பது உறுதியாகிவிட்டது. பாண்டவர்களும் கௌரவர்களும் யுத்தம் புரிவது தவிர்க்க முடியாது என்ற நிலையில், இரு தரப்பும் போர் புரிதலுக்கான உதவி கேட்டுப் பலரையும் அணுகினர்.

இவ்வாறு அணுகப்பட்டவர்களில் கண்ணபரமாத்மா முதன்மையானவர்.

பாரதப் போரை நடத்தி முடிப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட கண்ணபரமாத்மாவின் உதவி, போரில் ஈடுபட்ட இரு தரப்பிற்கும் அவசியமாயிற்று. போர்க்களத்தில் வெற்றியைத் தரக்கூடிய கண்ணபரமாத்மாவின் உதவியைக் கோரி துரியோதனனே முதலில் சென்றான். கண்ணபரமாத்மா குடியிருக்கும் துவாரகைக்குச் சென்ற துரியோதனன், துயில் கொள்ளும் கண்ணபிரானின் தலைமாட்டில் அமர்ந்து கொண்டான்.

துரியோதனைத் தொடர்ந்து கண்ணனிடம் சென்ற அருச்சுனன் கண்ணனின் கால்மாட்டில் அமர்ந்து கொள்கிறான். இப்போது துயில் கொள்ளும் கண்ணபரமாத்மாவின் தலைமாட்டில் துரியோதனனும் கால்மாட்டில் அருச்சுனனுமாக இருக்கின்றனர்.

உள்ளக ஒற்றுமை இல்லை என்றால்; விட்டுக் கொடுப்பு இல்லை என்றால்; நான் மட்டுமே ஆட்சி புரிய வேண்டும் என்று நினைத்தால்; இப்படித்தான் மற்றவர்களின் தலைமாட்டிலும் கால்மாட்டிலும் இருக்க வேண்டிவரும்.

அதிலும் பாரதப் போரை நடத்தியே ஆக வேண்டும் என்ற சபதத்தோடு இருக்கின்ற கண்ணனிடமே இருதரப்பும் மண்டியிட்டிருந்தமை, உள்ளக ஒற்றுமையில்லாதவிடத்து இருக்கக்கூடிய நிலைமை இதுதான் என்பதற்குத் தக்கசான்றாகும்.

என்ன செய்வது? மாயக் கண்ணன் விழிப்பது போலக் கண் திறக்கிறான். அருச்சுனனை முதலில் காண்கின்றான். அதன் பின் துரியோதனைப் பார்க்கின்றான். அருச்சுனா உனக்கு என்ன வரம் தேவை கேள்? என்கிறான் கண்ணன்.

இதன்போது குறுக்கிட்ட துரியோதனன் சுவாமி நானே! தங்களிடம் முதலில் வந்தேன். ஆகையால் எனக்கே முதலிடம் என்றான்.

துரியோதனா! நீ முதலில் வந்தாலும் நான் முதலில் பார்த்தது அருச்சுனனை என்கின்றான் கண்ணன்.

இருவரும் கண்ணனை தங்கள் பக்கம் சேருமாறு கேட்கின்றனர். அருச்சுனனை முதலில் பார்த்தமையால் எனது சரீரம் பாண்டவருக்கும், இரண்டாவதாகப் பார்த்த துரியோதனனுக்கு எனது ஆயுதங்களும் கிடைக்கும் என்று தீர்ப்பளித்து இரு தரப்பையும் அனுப்பி வைக்கிறான்.

இன்று மே-26. இந்திய தேசத்தின் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கிறார். இந்த நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கலந்து கொள்கிறார்.

மோடியின் பதவியேற்பில் கலந்து கொள்வதற்கு தன்னுடன் வருமாறு வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை ஜனாதிபதி மகிந்த கேட்ட போது, அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார் வடக்கின் முதல்வர்.

முதலில் சென்று மோடியின் தலைமாட்டில் இருப்பதை விட, இரண்டாவதாகச் சென்று எங்கள் பிரச்சினையை ஆற, அமர மோடிக்கு எடுத்துக் கூறுவதே பொருத்துடையது என்று முதலமைச்சர் கருதியிருக்கலாம்.

எதுவாயினும் கௌரவர்களும் பாண்டவர்களும் இருக்கக் கூடிய இலங்கைக்கு மோடி தான் இப்போதைய கண்ணபரமாத்மா. அவர் நினைத்தால் இலங்கையில் தர்மம் நிலைநாட்டப்படும் என்பதே மோடி பதவியேற்கும் இந் நாளில் நாம் சொல்லக்கூடிய கருத்து.

## நஞ்சுக் கிழங்கினை உட்கொண்ட இளைஞன் சிகிச்சை பலனின்றி மரணம்

### தெல்லிப்பழையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மூலிகைக் கிழங்கென நினைத்து நஞ்சுக்கிழங்கினை உட்கொண்ட இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த 22-ம் திகதி யாழ்.தெல்லிப்பழை வித்தகபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த சோதிநாதன் வைரவச்செல்வன் (வயது 22) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவ தினத்தன்று வெங்காய நடுகைக்காக தனது தோட்டத்தைப் பதப்படுத்திக் கொண்டிருந்தவேளை கிழங்கொன்று வெளிப்பட்டுள்ளது.

அக் கிழங்கினை எடுத்து நெருப்பில் சுட்டு பிரஸ்தாப இளைஞன் உண்டுள்ளார். தனக்கு ஏற்பட்டிருந்த நாரி வலிப்புக்கு மருந்தாக மேற்படிக் கிழங்கினை அடையாளம் கண்டே குறித்த இளைஞன் உட்கொண்டுள்ளார்.

அதேவேளை நாரி வலிப்பினை போக்கும் மூலிகைக் கிழங்கினையே தான் உட்கொண்டதாகவும் கூறியுள்ளார்.

இந்நிலையில் குறித்த கிழங்கினை உட்கொண்டு சில நிமிடங்களில் வாந்தியும் போதியும் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட இளைஞன் பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார்.

இந் நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் காலை அவர் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-6)

## ஜே.வி.பி அலுவலகத்தில் நேற்று மோதல்

(கொழும்பு)

பிலியந்தல, ஜாலியகொட பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில், இருவர் காயமடைந்த நிலையில் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த அலுவலகம் அமைந்துள்ள வீட்டின் உரிமையாளரான பந்துல கன்னங்கரவும் அவரது உறவினர் ஒருவருமே இவ்வாறு காயமடைந்துள்ளனர் என்று பிலியந்தல பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னுடைய எதிர்ப்பையும் மீறி, தனது வீட்டில் இந்த அலுவலகம் நடத்தப்பட்டு வருவதாகவும் அவ் அலுவலகத்தை அங்கிருந்து அகற்றுமாறு பல முறை கூறியும் அதனை ஜே.வி.பி.யினர் செவிமடுக்கவில்லை என்றும் அவ்வீட்டின் உரிமையாளர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய தினம், குறித்த அலுவலகத்துக்கு மேலும் ஒரு பகுதி உள்ளீர்க்கப்படவிருந்த முயற்சியை முறியடிக்க முயன்றபோதே தன்மீதும் தன் உறவினர் மீதும் ஐவர் கொண்ட குழுவினர் தாக்குதல்களை நடத்தியதாக பந்துல கன்னங்கர மேலும் கூறியுள்ளார். (எ-6)

## மீனவர்கள் விடுதலை: மோடி வரவேற்பு

(புதுடில்லி)

இந்திய மீனவர்களின் விடுதலையை பாரதத்தின் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ள நரேந்திர மோடி வரவேற்பதாக தனது டுவிட்டர் இணையத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டு இலங்கை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் சகலரையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டார்.

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்க உள்ள நிலையில் நல்லெண்ண நடவடிக்கையாக இவ்வுத்தரவினை ஜனாதிபதி பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.


இந்நிலையிலேயே நரேந்திர மோடி இதனை தெரிவித்தார். "இலங்கை மற்றும் பாகிஸ்தான் அரசாங்கங்கள் எமது மீனவர்களை விடுவித்ததை வரவேற்கின்றேன" என அவர் தனது டுவிட்டர் இணையத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையின் திறந்த வெளி அரங்கில் இன்று திங்கட்கிழமை மாலை நடைபெறும் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவுக்காக அண்மை நாடுகளின் தலைவர்கள் உட்பட 3 ஆயிரம் பேருக்கு அழைப்பு விடுகப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பாதுகாப்பு பணியில் 10 ஆயிரம் படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-6)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### மனவளக்கலை



உலக சமுதாயச் சூழ்நிலையில் விரிந்த கண்ணோட்டத்தோடு மக்களுக்குத் தொண்டு முறையில் ஆன்மீக அறிவை ஊக்குவிக்கவும் அதனைத் தடுத்துக்கொண்டிருக்கும் கற்பனைப் புகையையும் துன்பங்கள், சிக்கல்கள், இவற்றைக் குறைப்பதற்காகவும் திட்டமிட்டு ஆரம்பிக்கப் பெற்ற நிறுவனமே உலக சமுதாய சேவா சங்கமும் அதன் செயல்வழியாக மனவளக் கலையுமாகும்.

கர்மயோகம் என்னும் வாழ்க்கை நெறியை மக்கள் பண்பாடாக வளர்ப்பது சிறந்ததோர் சீர்திருத்தத் திட்டமாகும். சிந்தனையை வளர்க்கவும் அறிவுக்கு நுண்மை, கூர்மை, உறுதி, தெளிவு இவற்றையளித்து அமைதியை உருவாக்க வல்ல அகத்துவ முறை இதில் இருக்கிறது. நான் என்ன செய்கிறேன், இதனால் என்ன விளைவு ஏற்படும் என்பதை உணர்ந்து நல்லன தேர்ந்து செயலாற்றும் பண்பாட்டை வளர்க்க அகத்தாய்வுப் பயிற்சி இருக்கிறது. நோய்களைப் போக்கிக் கொள்ளவும் நோய் வராமல் காக்கவும் ஏற்ற உடற்பயிற்சியும் உடலோம்பும் அறிவுப் பாடங்களும் உள்ளன.

விளைவறிந்து செயலாற்றும் விழிப்பு நிலையில் ஒவ்வொரு செயலிலும் இறையுணர்வைப் பெற்றும் அறவழி வாழவும் ஏற்ற கர்மயோகி நெறி நிற்கும் வாழ்க்கை முறை இருக்கிறது. பிறவிப் பயனாகிய அறிவை அறிய, இறை நிலையோடு ஒன்று கலந்துபேரின்ப வாழ்வினை அனுபவிக்க ஏற்ற அறிவு விளக்கப் பயிற்சியும் வாழ்வு முறையும் உள்ளன.

தன் தகுதியை விளங்கிக்கொண்டும் அதை வளர்த்துக்கொண்டும் தன்னம்பிக்கையோடு வாழ்வை நடத்த அச்சமின்மையும் தகைமையும் வளர்த்துக்கொள்ள ஏற்ற ஆக்கமுறை வாழ்க்கை நெறி இருக்கிறது. பொதுவாகவும் சுருக்கமாகவும் சொல்லுமிடத்து மனிதன் மனிதனாக வாழ ஏற்ற ஒரு சாதனை வழியே மன வளக் கலையாகும்.

## பிரதேச சபை உறுப்பினர் விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் பகுதியில் வலி.வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது பின்னால் வந்த வான் மோதியதில் பிரதேச சபை உறுப்பினர் படுகாயமடைந்துள்ளார்.

ஏழாலை மேற்கைச் சேர்ந்த எஸ். செல்வராசா (வயது 68) எனும் பிரதேச சபை உறுப்பினர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட பிரதேச சபைகளின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வலி.தெற்கில் (உடுவில்) இடம்பெற்றது.

கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மோட்டார் சைக்கிளில் சென்ற மேற்படி உறுப்பினர் பிரதேச சபைக்கு முன்னால் தனது மோட்டார் சைக்கிளினைத் திருப்ப முற்பட்ட போது பின்னால் வந்த வான் மோதியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்து; நெல்லியடி மத்தி, சுந்தரபுரம் சரஸ்வதி அணிகள் சம்பியன்



நெல்லியடி மத்திய கல்லூரி அணி



வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்



வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்



நெல்லியடி மத்திய கல்லூரி அணி



வவுனியா மாதர்பனிக்கர் மகிழ்குளம் கனிஷ்ட உயர தரப் பாடசாலை


வவுனியா கனகராஜன்குளம் மகா வித்தியாலயம்

வடமாகாணத்தில் நடத்தப்பட்ட எறிபந்துப் போட்டியில் பெண்களில் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணியும் ஆண்களில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் சம்பியனாகின.

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் 5 கட்டங்களாக இடம்பெற்று வருகின்றன.

முதற்கட்டப் போட்டிகளான மரதனோட்டப் போட்டிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் முடிவுற்ற நிலையில் தற்போது, 2 ஆம் கட்டப் போட்டிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் 19 வயதுப்பிரிவு ஆண்கள், பெண்களுக்கான எறிபந்துப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இடம்பெற்று வந்தது.

இதில் பெண்களில் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் முதலிடத்தினையும், வவுனியா கனகராஜன்குளம் மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தினையும், யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டது.

ஆண்களில் யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரி அணி முதலிடத்தினையும், வவுனியா மாதர்பனிக்கர் மகிழ்குளம் கனிஷ்ட உயர தரப் பாடசாலை இரண்டாமிடத்தினையும், யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மூன்றாமிடத்தினையும் பெற்றன.(க)

## மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி!

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையே மாகாண மட்டத்தில் நடத்தப்படும் பெரு விளையாட்டுப் போட்டிகள் இன்று முள்ளியவளை வித்தியாணந்தா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டியில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு,

தலைமன்னார் பியர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகாவித்தியாலயம்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை எதிர் வவுனியா கிடாய்ச்சூரி கருவேப்பங்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.

கிளிநொச்சி பாரதி வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி. வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் மன்னார் கருங்கண்டல் மகா வித்தியாலயம்.

முல்லைத்தீவு எதுகஸ்வெல வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

மன்னார் துள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் வவுனியா தர்மபால வித்தியாலயம்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி எதிர் வவுனியா மாதர் பனிக்கர் மகிழங்குளம் சைவ வித்தியாலயம்.

இரண்டாம் சுற்றில் இருந்து யாழ்ப்பாணம் ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் மகா வித்தியாலயம் மோதவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



திருநெல்வேலி சிமாற் கிட்ஸ் மாதிரி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் மாகாண உத விக் கல்விப் பணிப்பாளர் சத்திய பாலன்மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும் மழலை களின் ஜிம்னாஸ்டிக் நிகழ்வுகள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளை யும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்டர்சன் அதிரடி

# பிளே ஓப் சுற்றுக்கு நுழைந்தது மும்பை

கோரி அண்டர்சனின் அபார ஆட்டத்தினால் ராஜஸ்தான் அணியை வீழ்த்தி மும்பை அணி பிளே ஓப் சுற்றுக்கு தகுதி பெற்றது. ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் நேற்றைய கடைசி லீக் (56) ஆட்டத்தில் ராஜஸ்தான் அணியும் மும்பை அணியும் மும்பையில் மோதின.

இப்போட்டியில் வெல்லும் அணி பிளே ஆப் சுற்றுக்கு தகுதி பெறும் என்பதால் இரு அணிகளுக்கும் இப்போட்டி முக்கியத்துவம்மிக்க போட்டியாக அமைந்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

ராஜஸ்தான் அணியின் ஆரம்ப வீரர்களாக வோட்சனும், சாம்சனும் களமிறங்கினர். ஆரம்பம் முதலே வோட்சன் பந்துகளை சந்திக்க திணறினார். ஹர்பஜன் வீசிய ஆட்டத்தின் 6-வது ஓவரில் 18 பந்துகளை சந்தித்து 8 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்த வோட்சன் பொல்லாட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். 3-வது விக்கெட்டுக்காக கருண் நாயர் சாம்சனுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் மும்பை பந்து வீச்சை எல்லைக்கோட்டை நோக்கி விரட்டி ஓட்டங்களை குவித்தனர்.

மும்பை வீரர் கோபல் வீசிய ஆட்டத்தின் 11-வது ஓவரில் நாயர் ஒரு சிக்சர், மூன்று பவுண்டரிகள் அடித்து கலக்கினார். அதேபோல் ஓஜா வீசிய ஆட்டத்தின் 13-வது ஓவரிலும் நாயர் மீண்டும் ஒரு சிக்சர் இரு பவுண்டரிகள் அடித்தார். இவ்வாறு அதிரடியாக ஆடி வந்த நாயர், பும்ராஹ் வீசிய ஆட்டத்தின் 15-வது ஓவரில் சிம்மன்சிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அவர் ஆட்டமிழந்த சிறிதுநேரத்திலேயே சாம்சனும் 74 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவரது ஓட்டங்களில் 7 பவுண்டரிகள் 3 சிக்சர்கள் அடங்கும்.

பின்னர் ஹொட்ஜூம், போல்க்னரும் ஜோடி சேர்ந்து அதிரடியாக ஆடினர். ஹர்பஜன் வீசிய ஆட்டத்தின் 18-வது ஓவரில் போல்க்னர் 2 சிக்சர்களை அடுத்தடுத்து விளாசினார். அதே ஓவரில் ஹொட்ஜூம் தன் பங்குக்கு ஒரு பவுண்டரி அடித்தார். இருவரும் அடித்து ஆடி ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருந்த போது போல்க்னர், பொல்லார்ட் வீசிய ஆட்டத்தின் கடைசி ஓவரில் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கடைசி பந்தில் ஹொட்ஜ் பவுண்டரி விளாச நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ராஜஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களை எடுத்தது.



வெற்றிக்கு 190 ரன்கள் தேவை என்ற இலக்குடன் மும்பை அணி களமிறங்கியது. அவ் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக சிம்மன்சும், ஹசியும் களமிறங்கினர். பிளே ஆப் சுற்றுக்கு தகுதி பெற வேண்டுமானால் மும்பை அணி 14.4 ஓவரில் 193 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டதால் இருவரும் ஆரம்பம் முதலே அடித்து ஆட முற்பட்டனர். இதனால் சிம்மன்ஸ் 12, ஹசி 22 ஓட்டங்களுடன் விரைவாக ஆட்டமிழந்து வெளியேறினர்.

3-வது இலக்க வீரராக அண்டர்சனும், 4வது இலக்க வீரராக பொல்லார்டும் களமிறங்கினர். அண்டர்சன் ராஜஸ்தான் பந்துவீச்சை அடித்து பந்துகளை சிக்ஸர்கள், பவுண்டரிகளாக பறக்கவிட்டு அசத்தினார். ஆனால் மறுமுனையில் விக்கெட்டுகள் சரிந்த வண்ணம் இருந்தன. பொல்லார்ட் 7, ரோகித் சர்மா 16 என நடையை கட்டினர். 6-வது விக்கெட்டுக்கு களமிறங்கிய அம் பாதி ராயுடு ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதுடன் அண்டர்சனுக்கு பக்கபலமாக விளங்கி ஓட்டக் குவிப்புக்கு உதவினார்.



இருவரும் இணைந்து ராஜஸ்தான் பந்துவீச்சை பவுண்டரிக்கும், சிக்சர்களுக்கும் விளாசி ஓட்டங்களைச் சேர்த்தனர். 10 பந்துகளை சந்தித்து 30 ஓட்டங்களைக் குவித்த ராயுடு துரதிர்ஷ்டவசமாக ரன் அவுட்டாகிவிட விக்கெட் கீப்பர் தாரே களமிறங்க நேரிட்டது. அப்போது 14.3 ஓவர்கள் முடிந்திருந்தது. அணியின் ஸ்கோர் 189 ஓட்டங்களை எட்டி சமநிலையில் இருந்தது. 14.4வது பந்தில் பவுண்டரி அடித்தால் மும்பையும், வைட பந்து போட்டால் 190 ஓட்டங்களை எடுத்து மும்பை வெற்றி பெற்றால் ராஜஸ்தானும் பிளே ஓப் சுற்றுக்கு தகுதி பெறும் என்ற நிலை இருந்தது. இதனால் மைதானமே பெரும் பரபரப்புடன் காணப்பட்டது.

போல்க்னர் வீசிய 14.4-வது பந்தில் தாரே சிக்சர் விளாசி மும்பை அணியை வெற்றி பெற வைத்ததுடன் பிளே ஆப் சுற்றுக்கும் தகுதி பெற வைத்தார். 44 பந்துகளில் 95 ஓட்டங்களை குவித்த அண்டர்சன் இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்ததுடன் போட்டியின் ஆட்டநாயகனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## ஜனாதிபதி...

யேற்பு வைபவத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்தமையைக் கண்டித்து நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவத்தை புறக்கணிக்கும் ம.தி.மு.க, மகிந்த ராஜபக்ஷவின் வருகைக்கு எதிராக வைகோவின் தலைமையில் இன்று டில்லியில் கறுப்புக் கொடி போராட்டம் நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ-6)

## அமெரிக்கா...

ளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பான விசாரணை ஆணைகுழுவினை நியமிக்கத்திட்டமிட்டுள்ள நிலையில் இந்தத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச மனித உரிமை சட்டங்களை மீறியவர்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை, பரக் ஒபாமா நிர்வாகம் நாட்டுக்குள் அனுமதிக்கக் கூடாது என தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ-6)

# நாமலின் கூட்டத்தில் குளவிகள் தாக்குதல்

## முப்பது பேர் பாதிப்பு

வவுனியா கலாபோகஸ்வெள கிராமத்தில் நாமல் ராஜபக்ஷ கலந்து கொண்டிருந்த கூட்டமொன்றில் குளவிகள் கொட்டியில் 30 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கூட்டம் இடம்பெற்றபோது மக்களால் கொளுத்தப்பட்ட பட்டாசின் சத்தத்திற்கே குளவிகள் கலைந்து மக்கள் மீது கொட்டியதாக தெரிய வருகின்றது.

இதனையடுத்து கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் மீது சரமாரியாக குளவி கொட்டியதை அடுத்து நாமல் ராஜபக்ஷவை அவரது மெய்ப் பாதுகாவலர்கள் பாதுகாத்துள்ளனர்.

இந் நிலையில் மெய்பாதுகாவலர்கள் உட்பட பொலிஸார் இராணுவத்தினர் உட்பட பொது மக்கள் மீதும் குளவி கொட்டியுள்ளது.

இந் நிலையில் குளவிக் கொட்டுக்கு இலக்காகியவர்கள், உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சுமார் 30 பேருக்கும் உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு தற்போது அவர்கள் பாதிப்பின்றி உள்ளதாக தெரிவித்த வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கு. அகிலேந்திரன் குளவி கொட்டுக்கு குழந்தைகளும் உள்ளடங்கியிருந்ததாகவும் தெரிவித்தார். (எ-6)

## தமிழ்க்...

வாக்காளர்களாக பதிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,தமிழினத்திற்கு எதிராக புரியப்பட்ட போர்க்குற்றம் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினை சர்வதேச நாடுகள் பல அந்நியப்படுத்தியுள்ளன.

மகிந்த ராஜபக்ஷவிற்கு வந்த நிலை எமக்கு வந்து விடக்கூடாது. அதனை எமது உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் புரிந்து செயற்படவேண்டும்.

மக்களின் ஆணையை மதித்து நடக்க வேண்டும். மக்களிடமிருந்தும் சர்வதேச நாடுகளிடமிருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அந்நியப்படுத்திவிடாதீர்கள்.

நாளுக்கு நாள் தமிழர்களின் நிலை மிகவும் மோசமடைந்து வருகின்றது. இராணுவ அடக்கு முறைகள், நில அபகரிப்பு என்று பலஅடக்கு முறைகளுக்குள் எமது தமிழினம் உட்பட்டுக்கொண்டிருக்கின்றது.

நாளை விடியும் போது என்ன நடக்குமோ என்ற அச்சத்திலேயே தமிழர்கள் வாழ்கின்றனர். இந்நிலையில் வாக்களித்த மக்களை வதைக்கும் வகையில் எமது கட்சியின் சார்பில் போட்டியிட்டவர்கள் செயற்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## திடீர்...

முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

கடந்த 23-ம் திகதி திடீரென ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட மேற்படி இளம் குடும்பப் பெண் பின்னர் அன்றிரவே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

பிரேத பரிசோதனையின்பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-6)

## அரசாங்கத்தின்...

இவ்விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஒப்பமிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார். அந்த அறிக்கையின் விபரம வருமாறு: 2014 மார்ச் 21-ம் திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களையும் தனியாட்களையும் இலங்கை அரசு பட்டியலிட்டமையை சந்தேகத்துக்கு இடமின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டிக்க விழைகின்றது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் 2012 மே 15-ம் திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஐ.நாவின் 2012 இன் முதலாம் இலக்க ஒழுங்கு விதிகளின் கீழ் விடுக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் கவுன்சிலின் 25-வது கூட்டத் தொடரில் 2014 மார்ச் 25-ம் திகதி இலங்கையில் மீள் நல்லிணக்கம், பொறுப்பு கூறல், மனித உரிமைகள் போன்றவற்றை மேம்படுத்துதல் என்ற தலைப்பில் 25/01 பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்ட செயற்போக்கை ஒட்டிய சமயத்திலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அத்தகைய அமைப்புக்களுக்கும் தனியாட்களுக்கும் அவ்வாறு பட்டியலிட்டமை குறித்து அறிவிப்பதற்கு தகுதி வாய்ந்த அதிகாரி அனைத்து நியாயபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என ஐ.நாவின் 2012 இன் முதலாம் இலக்க ஒழுங்கு விதிகளின் 7-ம் பிரிவு வலியுறுத்துவதை குறிப்பிட்டுச் சுட்ட விரும்புகின்றோம்.

அதற்கு மேல் அத்தகைய எழுத்து மூல அறிவித்தலில் அப்படி பட்டியலிட்டமையுடன் தொடர்பான காரணங்களும் அடங்கியிருக்க வேண்டும் என்பதை அந்த ஒழுங்குவிதி கொண்டுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தல் பிரசுரமாகி இரண்டு மாதங்கள் கடந்து விட்ட போதிலும் கூட இத்தகைய அமைப்புக்களையும் தனியாட்களையும் பட்டியலிட்டமைக்கான எந்தக் காரணத்தையும் முன்வைக்க இலங்கை அரசு தவறிவிட்டது.

எந்த ஓர் அமைப்பையும் அல்லது தனியாளையும் அப்படிப் பட்டியலிடுவதாயின் அத்தகைய அமைப்பு அல்லது தனியாள் பயங்கரவாதச் செயல் ஒன்றை செய்தமையை அல்லது செய்ய முயன்றமையை அல்லது அதில் ஈடுபட்டமையை அல்லது அதைச் செய்வதற்கு ஒத்துழைத்தமையை நம்ப வைக்கும் விதத்தில் நியாயமான காரணங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் நாம் குறித்துக் காட்டுகின்றோம்.

உலகத் தமிழர் பேரவை என்ற குடையின் கீழ் மேலும் பல புலம் பெயர் அமைப்புகள் அதன் அங்கத்துவ அமைப்புக்களாக உள்ளன. இலங்கை அரசு இவற்றில் சில அமைப்புக்களையும் உலகத் தமிழர் பேரவையுடன் சேர்த்துப் பட்டியலிட்டுள்ளது மேலும் 2005-ம் ஆண்டின் சட்ட விதிப்படி பயங்கரவாதச் செயல் என்று வர்ணிக்கப்படக்கூடிய எந்தச் செயலுடனும் எந்தத் தொடர்பும் இல்லாத போதிலும் கூட மேலும் பல அமைப்புக்கள் அவற்றைப் பட்டியலிடுவதை நியாயப்படுத்தக் கூடிய ஆதாரங்கள் இன்றியே பட்டியலிடப்பட்டுள்ளன.

தேசியப் பாதுகாப்புக்கு வன்முறை அச்சுறுத்தல் வருமாயின் அதனை முறியடிக்க உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களுக்கு அமைவானதாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எந்த ஓர் அரசுக்கும் உள்ள உரிமையை ஏற்றுக் கொள்ளும் அதே சமயம் அரசின் இந்தப் பிற்போக்குத்தனமான நடவடிக்கை, மீள் நல்லிணக்க உணர்வுகளுக்கு எதிராக வடக்கு கிழக்கில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளுக்கு முற்றிலும் ஒத்ததாக இருப்பதை ஆழ்ந்த கவலையோடு சுட்டிக் காட்டுகின்றோம்.

• அத்தகைய செயற்பாடுகளில் தனியார் நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்தல், கண்மூடித்தனமான கைதுகள், தடுப்புக் காவல்கள், பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்களுக்கு புனர்வாழ்வு ஆகியவையும் அடங்கும் எனவே மேற்படி அனைத்து அமைப்புக்களையும் தனியாட்களையும் பட்டியலிடும் தனது முடிவை மீள் பரிசீலனை செய்யுமாறும் 2005-ம் ஆண்டின் சட்டத்தில் விபரிக்கப் பட்டமைக்கு அமைவான பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டமை அல்லது அதற்கு உதவியவை தொடர்பில் சாட்சியங்கள் ஏதும் இல்லாத அமைப்புக்கள் மற்றும் தனியாட்களை பட்டியலில் இருந்து நீக்கும்படியும் அரசைக் கோருகின்றோம் என்றும் உள்ளது.(எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி மகிந்தவை...

முடியாது.

தீவிர இந்துத்துவ கொள்கையாளர், பாகிஸ்தானிய எதிர்ப்பாளர் என்றெல்லாம் நரேந்திர மோடி மேலைநாட்டு ஊடகங்களால் வர்ணிக்கப்படும், அவர் பிரதமரானால இந்திய-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே அணு ஆயுத யுத்தம் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டும் இருந்த வேளையில், அதிர்ச்சி வைத்தியம் அளித்திருக்கிறார் பிரதமராகப் பொறுப்பேற்க இருக்கும் நரேந்திர மோடி.

நரேந்திர மோடியின் நல்லெணணத்தை, அவரால் தொடர்ந்து விமர்சிக்கப்பட்ட பாகிஸ்தான் புரிந்து கொண்டு, பாகிஸ்தானின் பிரதமர் நவாஸ் ஷெரீப் பதவி ஏற்பு விழாவுக்கு வர இருக்கும் நிலையில்,

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ பதவி ஏற்பு விழாவுக்கு வருவதற்கு தமிழகத்திலிருந்து எதிர்ப்புக் குரல்கள் வருவது மிகவும் வருத்தத்திற்குரியது.

நரேந்திர மோடிக்கு விசா வழங்க மறுத்த அமெரிக்க அரசு, அவர் பிரதமரானவுடன் ராஜாங்க ரீதியிலான அழைப்பு விடுத்திருப்பதை நமது தமிழகத் தலைவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ ஒரு போர்க் குற்றவாளி என்று உலக நாடுகளுடன் சேர்ந்து இந்தியாவும் குரல் கொடுக்கலாம்.

ஆனால் அவர் இலங்கை ஜனாபதியில்லை என்று ஆகிவிடுமா? அவருடன பேசமாட்டோம், அவரை அழைக்க மாட்டோம் என்று நாம் முடிவெடுத்தால், போருக்குப்பின் வாழத் துடிக்கும் இலட்சக்கணக்கான தமிழர்கள் ஈழத்தில் உயிருடன் இருக்கிறாரகளே, அவர்கள் கதி என்ன? நாளும் பொழுதும் நமது மீனவர்கள் சிறை பிடிக்கப்படுகிறார்களே, அவர்களைப் பாதுகாப்பது எங்ஙனம்? கோடிக் கணக்கில் இலங்கையின் வடக்குப் பகுதியைப் புனர் நிர்மாணம் செய்ய இந்தியா வழங்கிய பணம், இலங்கையின் தென் பகுதியை வளப்படுத்துவதாகக் கூறப்படுகிறதே. அதைக் கண்காணித்துத் தட்டிக் கேட்பது எப்படி?

ஜனாதிபதி ராஜபக்ஷவின் செயல்பாடுகள் ஏற்புடையவை அல்லதான். அதற்குத் தீர்வு இலங்கையுடன் போர் தொடுப்பதல்ல. அவரை அழைத்துப் பேசுவது. பணிய வைப்பது.

ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் பேசாமல் இருப்பதாலோ இலங்கையை முற்றிலுமாகப் புறக்கணிப்பதாலோ நாம் சாதிக்கப் போவது என்ன என்பதை தமிழக அரசியல் கட்சிகள் சிந்திக்க கடமைப்பட்டுள்ளன.

கடைசியாக ஒரு வார்த்தை. நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, பாகிஸ்தானும் இலங்கையும் நமது அண்டை நாடுகள். அந்த நாடுகளுடன் நட்புறவு பாராட்டி நாம் இயங்கியாக வேண்டும். ஆபிரிக்காவுக்கு அப்பால், அல்லது அண்டார்டிக்காவுக்குப் பக்கத்தில் விலகிப் போ என்று சொல்ல முடியாது.

ஈழத்தில் போர் நடந்தபோது மத்திய அரசில் அங்கம் வகித்து மௌனம் காத்து துரோகம் இழைத்தவர்களையே நம்மால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

இன்னொருநாட்டுஜனாதிபதியான ராஜபக்ஷவை கண்டிக்க நினைக்கிறோமே, என்ன வேடிக்கை இது? புதிய பிரதமர் புத்திசாலித்தன மாகக் காயை நகர்த்த எத்தனிக்கிறார்.

அவரது ராஜதந்திர நடவடிக்கைக்கு, நமது தமிழக அரசியல் கட்சிகள் முட்டுக்கட்டை போடாமல் இருக்கக் கடவது ! என அவ் ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

## ஜனாதிபதி மகிந்த...

உள்ளிட்ட பல தலைவர்கள் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வருவதையடுத்து, நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவத்தைப் புறககணிக்க தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அத்துடன், இவ்வைபவத்தில் பங்கேற்க அவர் தனது சார்பில் பிரதிநிதி எவரையும் அனுப்பி வைக்கப் போவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, இப்பதவியேற்பு வைபவத்தில் பங்கேற்பது என்று தே.மு.தி.க, பா.ம.க ஆகிய கட்சிகள் முடிவு செய்துள்ளன.

தே.மு.தி.கவின் தலைவர் விஜயகாந்த், தனது மனைவி பிரேமலதா மற்றும் மைத்துனர் சுதீஷ் ஆகியோருடன் இப்பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பா.ம.க தலைவர் ஜி.கே.மணி மற்றும் அன்புமணி ராமதாஸ் ஆகியோரும் இப்பதவி

19 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி...

காப்புக் கடமைகளில் ஈடுபடவுள்ளதுடன், பாதுகாப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப்படவுள்ளன.

இந்திய ஜனாதிபதி மாளிகையைச் சுற்றியுள்ள 2 கிலோ மீற்றர் பிரதேசம் தீவிரமாக கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படவுள்ளதுடன், இப்பகுதிக்கு மேலாக விமானங்கள் பறக்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் பொருத்தப்படவுள்ளதுடன், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் இவ்வைபவத்தில் பங்கேற்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தங்கவுள்ள நட்சத்திர விடுதிகளின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளன. (எ-6)

## 3 விடுதலைப் புலி...

ஐரோப்பாவிலும், ஏனைய நாடுகளிலும் உள்ள தமது தொடர்புகள் மூலம் இவர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பை மீள உருவாக்க முயற்சித்ததாக, தனது பெயரை வெளியிடாத அந்த அதிகாரி கூறினார்.

பல நாடுகளில் தடை செய்யப்பட்ட அந்த அமைப்புக்கு நிதி சேகரிப்பது மற்றும் அதற்கான பரப்புரைகளை செய்வது ஆகிய நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் மலேசியாவில் உரிய வசா மற்றும் ஆவணங்கள் இல்லாமல் பல ஆண்டுகளாக தங்கியுள்ளதாக அவர் கூறுகிறார்.

அவர்கள் விரைவில் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் என்றும், இது குறித்து இலங்கைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (எ-6)

## கவனயீர்ப்புப் போராட்...

அமைப்பாளர் தங்கவேல் ஜெகதீஸ்வரன் கடந்த 23ஆம் திகதி இரவு பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இன்று திங்கட்கிழமை 26ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்துவதற்கு எமது கட்சி ஏற்பாடு செய்திருந்தது.

கிளிநொச்சி நில அபகரிப்பைக் கண்டித்தும் இராணுவத்தின் பிடியிலுள்ள வீடுகள் நிலங்கள் பொது மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் இடம் பெயர்ந்த மக்கள் அவர்களது சொந்த வீடுகளில் மீளக்குடியமர உடனடியாக அனும்திக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மேற்படி போராட்டத்திற்கான அழைப்பு கட்சியினால் விடுக்கப்பட்டிருந்தது.

மேற்படி கவனயீர்ப்பு போராட்டத்தினை குழப்பும் நோக்கில் இராணுவ புலனாய்வுத் துறையினர் கடந்த சில தினங்களாக எமது கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் வீட்டுக்குச் சென்று அச்சுறுத்தல் விடுத்திருந்ததுடன் இடம் பெயர்ந்த மக்களையும் கட்சியின் ஆதரவாளர்களையும் அச்சுறுத்தியிருந்தனர்.

இதேவேளை ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனுமான நாமல் ராஜபக்ஷ கிளிநொச்சிக்கு வருகைதரவுள்ளார் என்ற காரணத்திற்காக இந்த போராட்டத்தினை நடத்தவேண்டாம் என்று எமது கட்சி அமைப்பாளர் ஜெகதீஸ்வரனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி போராட்டத்தினை கைவிடுமாறு கோரியிருந்தார்.

இந் நிலையில் போராட்டம் நடத்துவதன் தொடர்பாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கும் வகையில் 23ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் எழுத்து மூலமான கடிதம் கட்சியின் பொதுச் செயலாளரினால் நேரில் சமர்ப்பிக்கப்பட்டது.

அக் கடிதத்தினை பார்வையிட்ட பொலிஸ் அதிகாரி போராட்டம் நடத்த அனுமதிக்க முடியாது என்று கூறியிருந்தார். காரணம் கேட்டபோது அன்றையதினம் முக்கிய பிரமுகர் ஒருவர் வருகை தரவுள்ளார் அதனால் அனுமதிக்க முடியாது என்று கூறப்பட்டது.

போராட்டம் நடத்த அனுமதிக்க முடியாதென்ற விடயத்தினை எழுதது மூலம் தருமாறு கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பதிகாரியை கோரியிருந்தார். எழுத்து மூலம் தருவது பற்றி தான் பின்னர் எம்முடன் தொடர்பு கொள்வதாக தெரிவித்திருந்தார்.

சட்டதிட்டங்களுக்கு அமைவாக ஏற்பாடு செய்யப்பட்ட ஜனநாயக் போராட்டத்தை அச்சுறுத்தல் மூலம் அரசாங்கம் நிறுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டது.

அதற்கு இடமளிக்காது சட்டதிட்டங்களுக்கு அமைவாக போராட்டத்தை நடத்துவதில் பாதிக்கப்பட்ட மக்களும் கட்சியும் உறுதியாக இருந்த நிலையிலேயே மேற்படி கைது இடம்பெற்றுள்ளது.

இதனால் எமது கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்தை அன்றையதினம் திட்டமிட்டபடி நடத்த முடியவில்லை. இருப்பினும் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 11 மணியளவில் போராட்டம் நடத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-8)

சிறுவர்களிற்கான தகவற்தொழில்நுட்பப் பாடநெறி
-கம்ப்யூட்டர் அடிப்படைகள்-
ABC IT for KIDS
A B C IT
அத்தியாவசியமான அனைத்தும் அடிப்படையில் இருந்து கற்கலாம்.
ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தினால் (OXFORD) உருவாக்கப்பட்ட பாடத்திட்டம்.
ஆன்லைனில் பரீட்சை – சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
இந்த வாரத்தில் இணைவோருக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.
ALISON DIGILITE
Supported by YES! Suvadi
51/3,(பொற்பதிப் பிள்ளையார் கோவிலருகில்) பொற்பதி வீதி,கொக்குவில்.
CALL/SMS 0779866409
(6487)

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES
French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Swiss, Belgium செல்வோர் பெற்றுக் கொள்ளலாம்... 805 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..
Note: 2006ம் ஆண்டிலிருந்து யாழில் French கற்பிக்கும் ஒரே ஒரு ஆசிரியர்..
ஆரியகுளம் மற்றும் Nelliady இல் மட்டுமே வகுப்புக்கள் நடைபெறுகிறது......
ஆரம்பம்:28.05 Wed 8.30am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 28.05 Wed 4pm. No.181, 1st Floor, Main Street, Nelliady.
Deutsch & Sinhala வகுப்புகளும் 021 320 2973 0779 789 456
(C-7483)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-7475)

SPEED LANKA EXPRESS
வெளிநாடுகளுக்கான
தபால் பொதிகள் சேவை



உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்
ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net
(C-7476)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org